# தமிழர் பொருண்மியம்

வாரமலர் TAMILS ECONOMY

விலை - 100/= இதழ் - 64 07.04.2024


# முறைசாரா பொருளாதாரத்தின் எழுச்சி ஏன் முக்கியமாகின்றது?




இலங்கை மற்றும் கிரேக்க - ரோமன் கடல்சார் வர்த்தக உறவுகள் என் 08

இலங்கை உலர் வலயத்தில் அப்பிள் பூத்து காய்க்குமா? 18

தேசியம் என்றால் 'லட்சம்' மலையகம் என்றால் 'ஆயிரம்' 20

எமது அன்புக்குரிய வாசகர்களுக்கு,

இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துகள்



**பழஞ்சோறு கறியளை மண்சட்டியில போட்டுக் குழைச்சு எடுத்து உருட்டி உருட்டி ஆச்சி பூவரசம் இலையிலை தாற அந்தச்சாப்பாட்டின்ரை உருசை எங்கயும் வராது. பிறகு உந்த குழைச்ச சட்டியை வழிச்சு நக்கிறதுக்கும் பெரிய போட்டா போட்டி நடக்கும்.**

# எங்கட ஆச்சி



- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -

முந்தி ஆச்சி சைவத்துக்குப் புறம்பாயும் மச்சத்துக்குப் புறம்பாயும் எண்டு ரெண்டு தொகுதி பாத்திரங்கள் வைச்சிருப்பா.

எல்லாம் அநேகமா மண்பாத்திரங்களாத்தான் இருக்கும். உந்த ரெண்டு தொகுதியும் ஒண்டோட ஒண்டு கலக்கப்படாது முட்டுப்படக்கூடாது எண்டதில ஆச்சி வலு கவனமா இருப்பா.

தற்செயலா கலந்திட்டுது எண்டாலோ முட்டும் பட்டுட்டுது எண்டாலோ சன்னதம் ஆடுவா. அடுக்களைக்கு வெளியில ரெண்டு அட்டாளை போட்டிருக்கும். ஒண்டு மச்சப் பாத்திரங்கள் கழுவிக்கவிக்கிறதுக்கு எண்டும் மற்றது சைவச்சமையல் பாத்திரங்கள் கழுவிக்கவிக்கிறதுக்கு எண்டும் இருக்கும். உந்த மச்ச அட்டாளைக்குப் பக்கத்தில மீன் இறைச்சி வெட்டிற அருவாளும் ஒரு பக்கமாத் தலையைச்சரிச்சு வைச்சு கள்ளு வெறியிலை படுத்து இருக்கிற அப்பு மாதிரி படுத்திருக்கும்.

தற்செயலா மழை பெஞ்சாலும் அடுப்பு மூட்டுறதுக்கு நனையாம இருக்கிறதுக்கெண்டு காங்குமட்டை கொக்கறை பன்னாறை கருக்கு மட்டையெல்லாம் அடுக்களைத் தாவாரத்தில இறப்பில அட்டியாகக் கட்டித் தூக்கி இருக்கும்.

அடுப்பு குந்தி இருந்து மூட்டுறமாதிரித்தான் இருக்கும். உப்பிடி குந்தி இருக்கிறதால இடுப்பு கைகால் மூட்டுகளுக்கு வயிறு முதுகு கை கால் தசையளுக்கு நல்ல பயிற்சி மூட்டு வருத்தங்கள் ஒண்டும் வராது. வயிறு வளந்து வண்டி வைக்காது எண்டு ஆச்சி சொல்லுவா.

அதிலும் பிள்ளைத்தாச்சிப் பெண்டுகள் உப்பிடி குந்தி இருந்து சமைச்சினம் எண்டால் ஒரு கரைச்சலும் இல்லாம வெட்டாம கொத்தாம காசுச் செலவு இல்லாமல் நல்ல சுளுவாப் பிள்ளைப்பேறலாம் எண்டு சொல்லுவா.

வெள்ளிக்கிழமை விரதநாட்கள் எண்டால் ஆச்சி குசினி திண்ணையெல்லாம் சாணி போட்டு மெழுகி குளிச்சுத் தோஞ்சுபோட்டுத்தான் உலை வைப்பா. உந்தச் சாணி நல்ல ஒரு கிருமிநாசினி கிருமியள் ஒண்டையும் அண்டவிடாது எண்டு ஆச்சி சொல்லுவா.

அதாலதான் சிலவேளை அவ வீட்டு முத்தத்தைக் கூட்டிப் போட்டும் சாணித்தண்ணி தெளிப்பா. ஆச்சி ஒவ்வொரு நாளும் காலமை அடுப்பு மூட்டைக்கை அப்பா பிள்ளையாரப்பா எண்டு கும்பிட்டுப்போட்டுத்தான் தொடங்குவா. அதாவது சமையலையும் ஒரு தெய்வீகமான செயலாப் பாக்கிற பண்பு அப்ப எங்கடை ஆக்களிட்டை இருந்தது. அடுப்பு மூட்ட வளவுக்கை விழுகிற கொக்கறை பன்னாறை இல்லாட்டில் காவோலையைப் பாவிச்சுப் பிறகு எரிக்கிறதுக்கு கருக்கு மட்டை காங்குமட்டை இல்லாட்டில் காஞ்ச பூவரசம் கதியால் துண்டுகளைப் பாவிப்பா. ஆனால் பால் காய்ச்சேக்கை மட்டும் பசுவின்ரை முலைக்காம்பு வெடிச்சுப்போடும் எண்டு கருக்கு மட்டை பாவிக்கமாட்டா.

மண்பானை சட்டியிலதான் ஆச்சி சோறு கறி சமைப்பா. மண்சட்டியிலைதான் பால் காச்சுவா. உந்த மண்பாத்திரங்களிலை சமைச்சால் ஒரு தனி உருசை வரும். அதை அனுபவிச்சவைக்குத்தான் உது விளங்கும். அதிலையும் மண் சட்டியில சுண்டக்காய்ச்சிற பால் தேவாமிர்தம் எண்டுதான் சொல்ல வேணும். பால்காச்சின சட்டியை சுரண்டித்தின்னிறதில இருக்கிற சுகம் எவ்வளவு பெரிய சுகம். உந்தப் பால்சட்டி சுரண்டிறதுக்கெண்டு சின்னன் பொன்னன் எல்லாம் சண்டை பிடிக்கும். அவட்டையளின்ரை கரைச்சல்தாங்கேலாம சில வீடுகளில ஆரார் எப்ப எப்ப சுரண்டாலாம் எண்டு முறை எல்லாம் வைச்சிருப்பினம்.

பழஞ்சோறு கறியளை மண்சட்டியில போட்டுக் குழைச்சு எடுத்து உருட்டி உருட்டி ஆச்சி பூவரசம் இலையிலை தாற அந்தச்சாப்பாட்டின்ரை உருசை எங்கயும் வராது. பிறகு உந்த குழைச்ச சட்டியை வழிச்சு நக்கிறதுக்கும் பெரிய போட்டா போட்டி நடக்கும். அதை அப்பிடியே விரலால வழிச்சு நக்கிறதில வாற திருப்தி வேற ஒண்டிலையும் வராது. நாகரீகம் எண்ட பெயரில உந்த அடுக்களையின்ரை இடத்தை சீமெந்துக் குசினியளும் மண் அடுப்புகளை காஸ்அடுப்புகளும்குக்கர்களும் மண்சட்டி பானையை அலுமினியமும் எவர்சில்வரும் ஆக்கிரமிக்க எங்கட சமையல்முறையளும்உணவுமுறையளும் உறவு முறையளும் மாறமாற எங்களை விதம்விதமான வருத்தங்கள் ஆக்கிரமிச்சுப் போட்டுதெண்டுதான் சொல்ல வேணும் கண்டியளோ .

# முறைசாரா பொருளாதாரத்தின் எழுச்சி ஏன் முக்கியமாகின்றது?

**முறைசாரா தொழிலாளர்கள் பெரும்பாலும் சுகாதார நலன்கள் அல்லது வேலை பாதுகாப்பு போன்ற சமூக பாதுகாப்பு வலைகளை கொண்டிருக்கவில்லை. அவர்கள் நிறுவப்பட்ட வணிகங்களிலிருந்து போட்டியை எதிர்கொள்கின்றனர், மேலும் தெரு விற்பனை அல்லது பதிவு செய்யப்படாத வணிகங்களை நிர்வகிக்கும் விதிமுறைகள் சிக்கலானதாக இருக்கலாம்.**

**அகிலன்**

இலங்கையின் பொருளாதார நெருக்கடி, அதிகரித்து வரும் பணவீக்கம், எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் நாணயப் பெறுமதி இறக்கம் போன்றவற்றால் இலங்கையர்களை வாழ்க்கையின் விளிம்பிற்கு தள்ளியுள்ளது. முறையான வேலைகள் பற்றாக்குறையாகி, வருமானம் குறைந்து வருவதால், ஒரு முக்கியமான உயிர்நாடி உருவாகிறது:

அதுதான் முறைசாரா பொருளாதாரம். தெருவோர வியாபாரிகள், வீடு சார்ந்த வணிகங்கள் மற்றும் சுயாதீன நிகழ்ச்சிகள் ஆகியவை அதிகரித்து வரும் மக்கள்தொகைப் பிரிவினருக்கு உயிர்வாழ்வதற்கான வழியை வழங்குகின்றன.

முறைசாரா துறையின் இந்த எழுச்சி ஒரு சிக்கலான படத்தை முன்வைக்கிறது. வருமானம்ஈட்டுவதற்கும் சுயசார்புக்கான வாய்ப்புகளை வழங்குகின்ற அதேவேளை, இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பின் பாதிப்புக்களையும் இது எடுத்துக்காட்டுகிறது.

### அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்:

பெரும்பாலான இலங்கையர்களுக்கு முறைசாரா பொருளாதாரம் என்பது உயிர்வாழ்வதற்கான பிரச்சினை. ஒரு ஆடைத் தொழிற்சாலையில் வேலை இழந்த ஒற்றைத் தாயான செல்வி காந்தி, இப்போது தனது வீட்டிற்கு அருகிலுள்ள ஒரு தற்காலிகக் கடையில் இருந்து காய்கறிகளை விற்கிறார்.

"ஒவ்வொரு நாளும் விலைகள் அதிகரித்து வருகின்றன, ஆனால் நான் என் குழந்தைகளுக்கு உணவளிக்க வேண்டும். இந்த சிறு வணிகம் எனக்கு கூடுதல் பணம் சம்பாதிக்க அனுமதிக்கிறது" என்று அவர் விளக்குகிறார். அவரது கதை, பழங்கள், வீட்டில் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்கள் அல்லது பயன்படுத்திய பொருட்களை விற்பதற்குத் திரும்பிய எண்ணற்ற மற்றவர்களின் அனுபவத்தை பிரதிபலிக்கிறது.

### மறைக்கப்பட்ட பணியாளர்கள் மற்றும் சவால்கள்:

முறைசாரா பொருளாதாரம் பெரும்பாலும் சுயாதீனமாக இயங்குகிறது, அதன் சரியான அளவைக் கணக்கிடுவது கடினம். எவ்வாறாயினும், தெருவோர வியாபாரிகள், முச்சக்கர வண்டி சாரதிகள் மற்றும் வீடு பழுதுபார்ப்பு அல்லது கைவினைஞர் வேலை போன்ற சேவைகளை வழங்கும் தனிநபர்களின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு நிகழ்வுகளின் சான்றுகள் சுட்டிக்காட்டுகின்றன. இது ஒரு நெகிழ்வான வருமான ஆதாரத்தை வழங்கும் அதே வேளையில், இது சவால்களுடன் வருகிறது.

முறைசாரா தொழிலாளர்கள் பெரும்பாலும் சுகாதார நலன்கள் அல்லது வேலை பாதுகாப்பு போன்ற சமூக பாதுகாப்பு வலைகளை கொண்டிருக்கவில்லை. அவர்கள் நிறுவப்பட்ட வணிகங்களிலிருந்து போட்டியை எதிர்கொள்கின்றனர், மேலும் தெரு விற்பனை அல்லது பதிவு செய்யப்படாத வணிகங்களை நிர்வகிக்கும் விதிமுறைகள் சிக்கலானதாக இருக்கலாம்.

### அரசாங்கத்தின் பதில் மற்றும் எதிர்காலம்:

இலங்கை அரசாங்கம் ஒரு இக்கட்டான நிலையை எதிர்கொண்டுள்ளது. பொருளாதார நெருக்கடியின் போது முறைசாரா துறை ஒரு முக்கியமான பாதுகாப்பு வால்வை வழங்குகிறது, ஆனால் இது இழந்த வரி வருவாய் மற்றும் முறையான வணிகங்களுக்கு சாத்தியமான இடையூறுகள் பற்றிய கவலைகளை எழுப்புகிறது.

முறைசாரா துறையில் செயல்படும் சிறு வணிகங்களை ஆதரிப்பதற்கான நுண்கடன் திட்டங்கள் போன்ற சில முயற்சிகள் நடந்து வருகின்றன. எவ்வாறாயினும், பொருளாதார நெருக்கடியின் மூல காரணங்களை நிவர்த்தி செய்வதற்கும் மிகவும் வலுவான முறையான வேலை சந்தையை உருவாக்குவதற்கும் ஒரு நீண்ட கால உத்தி தேவைப்படுகிறது.

### துன்பங்களின் மத்தியில் ஒரு தந்திரோபாயம்

இலங்கையில் முறைசாரா பொருளாதாரத்தின் எழுச்சியானது மீள்தன்மை மற்றும் தழுவல் பற்றிய கதையாகும். துன்பங்களுக்கு மத்தியில் தங்களையும் தங்கள் குடும்பத்தையும் ஆதரிப்பதற்கான வழிகளைக் கண்டறியும் மக்களின் உறுதியை இது பிரதிபலிக்கிறது. எவ்வாறாயினும், இது நிலையான பொருளாதார மீட்சியின் தேவை மற்றும் வேலை உருவாக்கம் மற்றும் சமூக பாதுகாப்பு வலைகளை வளர்க்கும் கொள்கைகளின் அப்பட்டமான நினைவூட்டலாகவும் செயல்படுகிறது.

அப்போதுதான் இலங்கை வெறும் உயிர்வாழும் நிலைக்கு அப்பால் நகர்ந்து மேலும் அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நெகிழ்ச்சியான எதிர்காலத்தை கட்டியெழுப்ப முடியும்.

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0764438620

## புதுவருடம்

இலங்கை முழுவதற்கும் பொதுவாக உள்ள கொண்டாட்டங்களில் முதன்மையானது சித்திரை புத்தாண்டுக் கொண்டாட்டம்தான். இதனை தமிழர்களும் கொண்டாடுகின் றார்கள். சிங்கள மக்களும் கொண்டாடுகின்றார்கள். பழைய கணக்குகளை முடித்து புதுக் கணக்குத் தொடங்குகின்ற மாதமாகவும் இதுதான் இருப்பதால், பொருளாதார ரீதியாகவும் இதுதான் முக்கியத்துவம் பெறுகின்றது. கைவிஷே“ம் கொடுப்பது, நாள் பார்த்து தொழிலை ஆரம்பிப்பது என்பனவும் பொருளாதார ரீதியான முக்கியத்துவத்தைத்தான் உணர்த்துகின்றன.

வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டுவிட்டதாகச் சொல்லிக்கொண்டாலும் கூட, அந்த “மீட்சி” என்பது எந்தளவுக்கு நிரந்தரமானது என்ற கேள்வி இருக்கின்றது. உல்லாசப் பயணிகளின் வருகையின் அதிகரிப்பு, வெளிநாடுகளுக்குப் பணிக்குச் சென்றவர்கள் அனுப்புப் பணத்தின் அதிகரிப்பு என்பவற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியும்தான் பொருளாதாரத்தை இப்போது சற்று தூக்கியிருக்கின்றது.

அதனைவிட, உற்பத்தித்துறையிலோ, சேவைத்துறையிலோ குறிப்பிடத்தக்களவு முன்னேற்றங்கள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை. ஏற்றுமதித் துறையும் பெருமளவுக்கு வளர்ச்சியைக் காண்பிக்கவில்லை. அரசாங்கமும் அதில் செலுத்தும் கவனம் போதியதாக இல்லை என்பதும் கவலைக்குரியது. அதேவேளையில், இலங்கையில் தாராளமாக உற்பத்தி செய்யக் கூடிய வெங்காயம், முட்டை, ரின் மீன் போன்றவற்றை இறக்குமதி செய்வதற்காக பெருமளவு டொலர்களை அரசாங்கம் வெளியே அனுப்பிக்கொண்டிருக்கின்றது.

இவ்வாறான தினசரி பாவனைப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக பெருமளவு அந்நியச் செலவணியை எதற்காக செலவிட வேண்டும் என்ற கேள்வி ஒன்றும் எழுப்பப்படுகின்றது. தேர்தல் எதிர்கொள்ளப்படுவதால் இவற்றுக்கான விலைகளை குறைப்பதன் மூலம் சாதாரண மக்களின் ஆதரவைத் தக்கவைப்பது முதலாவது நோக்கமாக இருக்கலாம். உள்ளூர் உற்பத்தியாளர்கள் இதனால் எந்தளவுக்குப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதையிட்டு அரசாங்கம் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

இரண்டாவது, இந்தப் பொருட்களின் இறங்குமதியாளர்கள் அரசாங்கத்துக்கு வேண்டியவர்களாக இருக்கலாம். அவர்கள் உழைக்கட்டும் என அரசாங்கம் குறிப்பிட்ட பொருட்களின் இறக்குமதியைத் திறந்துவிடுவதாக ஒரு கருத்து பொதுவாக உள்ளது. கோழிப் பண்ணையாளர்கள் கோழித்தீன் விலை அதிகரிப்பால்தான் முட்டைகளின் விலையை அதிகரிக்கின்றார்கள். அல்லது, தொழிலைக்கைவிடுகின்றார்கள். அவர்களுடைய பிரச்சினையைத் தீர்த்துவைக்க எதனையும் செய்யாத அரசாங்கம், அந்த நெருக்கடியை மேலும் தீவிரமாக்கும் வகையில் இறக்குமதியைத் திறந்துவிடுகின்றது.

சித்திரைப் புத்தாண்டு பிறக்கும் இந்த வேளையில், தேர்தல்களும் எதிர்கொள்ளப்படுவதால் இதனை இலக்காகக் கொண்ட செயற்பாடுகளை மட்டுமே காணமுடிகின்றது. ஏற்களவே இருக்கின்ற நெருக்கடிகளை இது மேலும் தீவிரமாக்குமே தவிர தீர்த்துவைக்க எந்த வகையிலும் உதவப்போவதில்லை.

# இனிப்பான இயற்கையின் அற்புதம் மா மரம்.



யேமிகா பொன்னுத்துரை
விவசாய பீடம்
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

மா ஆனது மிகவும் பயனுள்ள ஓர் கனிமரமாகும். இதில் எமது பிரதேசத்தில் பல சுவைமிகு இனங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் அம்பலவி, கறுத்தக்கொழும்பான், செம்பாட்டான், விலாட் போன்றவை மிகவும் பிரசித்தம் வாய்ந்த சுவைமிகு இனங்களாகும். இவற்றின் விளைச்சலை அதிகரிப்பதன் மூலம் எமது வருமானத்தைப் பெருக்க முடியும்.

பொதுவாக வீட்டுத்தோட்டங்களிலும் முற்றங்களிலும் காணப்படும் மாமரங்களில் சில பல ஆண்டுகளாகக் காய்க்காமலும் இடையிடையே காய்ப்பதுவும் குறைந்த விளைச்சலைக் காட்டுவதும் எமது பிரதேசத்திலுள்ள பரவலான ஓர் பிரச்சனை ஆகும். இயல்பாகவே பல மரங்கள் ஒன்று விட்ட வருடங்களில் காயக்கும் இயல்பினைக் கொண்டிருக்கலாம். ஏனெனில் புதிதாக உருவாகும் தளிர்கள் ஒளித்தொகுப்பின் மூலம் போதிய மாப்பொருள் சேமிப்பின் பின்பே பூக்கும். பூ உண்டாவதற்கு கூடிய அளவில் காபனும் குறைந்த அளவில் நைதரசனும் வேண்டும். இது ஒளித்தொகுப்பின் பின்னான மாப்பொருள் சேமிப்பினாலே கிடைக்கின்றது. ஆகவே போதிய சூரிய ஒளி கிடைக்கச் செய்ய வேண்டும்.

அத்துடன் வருடத்தின் ஐந்தாம் ஆறாம் மாதம் அளவில் அறுவடையின் பின்பு தொடர்ந்து 3 அல்லது 4 நீர்ப்பாசனம் 10-12 நாள் இடைவெளியில் வழங்கி பசளை இட வேண்டும். இதனால் அடுத்தடுத்த மாதங்களில் புதிய தளிர்கள் உருவாகி 6 மாதகால இடைவெளியின் பின் பூக்கும். மாமரங்களைச் சுற்றவுள்ள தி மரங்களை வெட்டி போதிய சூரிய ஒளி கிடைக்கச் செய்ய வேண்டும். இதனால் ஒளித்தொகுப்பு வீதம் உயர்வடைந்து பூக்கள் அதிகமாகப் பூக்கும்.

தொடர்ந்து பல வருடங்களாகக் காய்க்கும் மரங்கள் மண்ணிலிருந்து போசனைப் பொருட்களை தொடர்ந்து உள்ளெடுப்பதனால் மண்ணின் போசனை மாமரத்திற்குக் கிடைக்காது போதுமானால் காய்களை உற்பத்தி செய்யும் திறன் குறைவடையும். இதனைத் தவிர்ப்பதற்குத் தொடர்ச்சியான பசளைப் பிரயோகம் அவசியமாகிறது.

மாமரத்தின் விதானப் பரப்பிலிருந்து உட்பக்கமாக 2-2 அடி அகலமுள்ள விட்டப் பரப்பில் காய்ந்த இலைகள், புல் போன்றவற்றையும் ஆட்டெரு மாட்டெரு போன்றவற்றையும் மண்ணுடன் கலந்து இடுவது சிறந்தது.

மாமரங்களில் குருவிச்சை போன்ற ஒட்டுண்ணிகள் மரத்தின் கிளைகளை நிழற்படுத்தும். அத்துடன் நீர், போசணைப் பொருட்களின் போட்டி என்பனவற்றாலும் மரத்தின் காய்க்கும் தன்மையைக் குறைத்து விடும். இவ் ஒட்டுண்ணிகளை வெட்டி அகற்ற வேண்டும். அத்துடன் பட்ட கொப்புகளையும் வெட்டி அகற்றவேண்டும்.

மாமரங்களில் பொதுவாக மாவிலைத் தத்தி, மூட்டுப்பூச்சிகள் போன்றவற்றின் தாக்கம் காணப்படும். இவை பூக்கள், சிறு காய்கள் போன்றன உதிர்வதற்குக் காரணமாக அமைந்து விளைச்சலைப் பாதிக்கின்றன. இவற்றிற்குத் தகுந்த பூச்சி நாசினியை உபயோகிக்க வேண்டும். இதன் மூலம் இப்பீடைகளின் தாக்கத்தை கட்டுப்படுத்தி விளைவைக் கூட்ட முடியும். மேலும் சிறப்பான விளைச்சலினைப் பெறுவதற்கு, மாமரத்தின் காபன், நைதரசன் விகிதம் சரியான முறையில் பேணப்படவும் மிகையான நைதரசன் உறிஞ்சலை அல்லது உள்ளெடுப்பைக் கட்டுப்படுத்தவும் மேற்பரப்பிலுள்ள சிறு வேர்களை செயல் இழக்கச் செய்வதற்கும் சராசரியாக ஒரு மரத்திற்கு 5மப கறியுப்பை மண்ணுடன் கலக்க வேண்டும்.

மரத்தின் அடியில் மரப்பட்டையை இடையிடை வெட்டி விடுவதன் மூலம் உரியத்தினூடான வேரிற்கான மாப்பொருள் கடத்தல் குறைவடைந்து கிளைகளில் மாப்பொருட் சேமிப்பு அதிகரித்து அதன் மூலம் பூக்கும் விகிதம் உயர்வடையும்.

மரத்தின் கீழ் சிறிதளவு குப்பைகளைப் பரவி எரிப்பதன் மூலம் புகையிலுள்ள எதலீன் வாயு ஓமோனாகத் தொழிற்பட்டு பூ உருவாவதைத் தூண்டும். இவ்வாறு எரியூட்டும் போது மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும். ஏனெனில் சிறிய மரங்களாயின் உயர் வெப்பம், நெருப்புக் காரணமாகப் பட்டுவிடுவதற்கும் சாத்தியம் உண்டு. இவ்வாறான எரித்தல் மூலமான புகையூட்டலினால் மாவிலைத் தத்திகளும் ஓரளவு கட்டுப்படுத்தப்படும்.

இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் நாம் மாமரங்களின் விளைச்சலை அதிகரித்துப் பயன்பெற முடியும்.




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,76,700 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,92,700 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




**கேள்வி -** பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் வெளிநாட்டு வருமானங்கள் எந்தளவுக்கு அதிகரித்திருக்கின்றது. இது குறித்த விரிவான தகவல்கள் உள்ளதா?

**எம்.துஷ்யந்தினி,**
**பேராதனை, கண்டி.**

**பதில் -** 2024ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் 74 ஆயிரத்து 499 இலங்கையர்கள் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர் என்ற இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. இதன் மூலம் குறிப்பிடத்தக்களவு வருமானமும் கிடைத்துள்ளது.

வெளிநாடுகளுக்கு வேலை பெற்று சென்றவர்கள் தொடர்பிலும், வெளிநாட்டு வருமானங்கள் தொடர்பாகவும் மத்திய வங்கி முக்கியமான தகவல்களைத் தெரிவித்துள்ளது. அதிலிருந்து சிலவற்றை உங்களுக்குத் தருகிறோம்.

வேலைவாய்ப்பு பெற்று வெளிநாடுகளுக்கு சென்ற 74 ஆயிரத்து 499 இலங்கையர்களில் 46 வீதமானோர் பெண்களாவர். கடந்த 2023இல் இதே காலகட்டத்தில் 76 ஆயிரத்து 025 இலங்கை பணியாளர்கள் வெளிநாடுகளுக்கு சென்றனர். அந்த எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில், இந்த ஆண்டின் முதல் காலாண்டில் வெளிநாடுகளுக்கு சென்றவர்களின் எண்ணிக்கையில் சற்று வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இலங்கையர்கள் பெரும்பாலும் தென்கொரியா, இஸ்ரேல், ஜப்பான் போன்ற நாடுகளில் வேலைவாய்ப்புபெற விரும்புகின்றனர். அதனடிப்படையில், 2024ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் 17 ஆயிரத்து 793 பேர் குவைத்துக்கும், 2 ஆயிரத்து 374 பேர் தென் கொரியாவுக்கும், 2 ஆயிரத்து 114 பேர் இஸ்ரேலுக்கும், ஆயிரத்து 899 பேர் ருமேனியாவுக்கும், ஆயிரத்து 947 பேர் ஜப்பானுக்கும் சென்றுள்ளனர்.

அத்துடன், இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்கள் 963.8 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு அனுப்பியுள்ளனர் என குறிப்பிட்டுள்ளது. மத்திய வங்கியின் தரவுகளின் பிரகாரம், வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கை தொழிலாளர்கள் இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் அதிக அந்நிய செலாவணியை ஈட்டிக் கொடுத்துள்ளனர்.

அத்துடன், ஆடை உற்பத்தித்துறை மூலம் 803.4 மில்லியன் டொலர், சுற்றுலாத்துறை மூலம் 687.5 மில்லியன் டொலர், தேயிலை உற்பத்தித்துறை மூலம் 229.9 மில்லியன் டொலர், பெற்றோலியப் பொருட்கள் ஏற்றுமதியில் 177.3 மில்லியன் டொலர், இறப்பர் தயாரிப்பு ஏற்றுமதியில் 166.4 மில்லியன் டொலர், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த ஏற்றுமதியில் 102 மில்லியன் டொலர் என அந்நிய செலாவணி வருவாய்களும் சிறந்த முறையில் பெறப்பட்டுள்ளதாக மத்திய வங்கித் தரவுகளினூடாக தெரியவருகிறது.

**கேளுங்கள் தருகின்றோம்**

தமிழர் பொருண்மியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -

tamilseconomy@gmail.com




| | |
|---|---|
| கத்தரிக்காய் | 140/= |
| உருளைக்கிழங்கு | 180/= |
| பச்சை மிளகாய் | 180/= |
| தக்காளி | 80/= |
| மரவள்ளிக்கிழங்கு | 120/= |
| கோவா | 200/= |
| கரட் | 300/= |
| வாழைக்காய் | 180/= |
| சின்ன வெங்காயம் | 250/= |
| பாகற்காய் | 350/= |
| வெண்டக்காய் | 150/= |
| பயற்றங்காய் | 250/= |
| பீற்றூட் | 200/= |
| முருங்கக்காய் | 800/= |
| தேங்காய் | 130/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 191/= |
| கனடா டொலர் - | 216/= |
| சீன யுவான் - | 40/= |
| யுரோ - | 317/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர்டொலர் - | 217/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 370/= |
| சுவிஸ் பிராங் - | 324/= |
| அமெரிக்க டொலர் - | 295/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 202/= |
| கனடா டொலர் - | 226/= |
| சீன யுவான் - | 43/= |
| யுரோ - | 331/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர் டொலர் | 227/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 386/= |
| சுவிஸ் பிராங் - | 340/= |
| அமெரிக்க டொலர் - | 304/= |

# வளர்ந்த நாடுகளில் வேளாண் சுற்றுலா

**குழந்தைகளை அழைத்து வந்து பயிர்களை, பழங்களை அடையாளம் காட்டலாம். ஒரு வகையில் இது அவர்களிடையே வேளாண்மைசார்ந்த கல்வியறிவை ஊக்குவிக்கும். அத்தோடு அவர்களுக்கு உண்டான பொழுதுபோக்கு அம்சங்களும் நிறைந்து இருக்கின்றன. குதிரை சவாரி, பண்ணை குட்டைகளில் மீன் பிடிப்பு போன்றவைகளும் பொழுதுபோக்கு அம்சங்களாக உள்ளன..**

**செ.சரத்**

வளர்ந்த நாடுகள் யாவும் தன்னகத்தே பல்வேறு புதியதொரு தொழில் முறைகளையும், தொழில் நுட்பங்களையும் கையில் வைத்துள்ளன. அந்த வகையில் வேளாண் சுற்றுலாவை முதன் முதலில் அறிமுகப்படுத்தி அழகு பார்த்த பெருமை இத்தாலி நாட்டுக்கு உண்டு என்பதை முன்பே பார்த்து இருந்தோம். அதே வழியில் இங்கு ஸ்பெயின் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளையும் குறிப்பிட வேண்டும்.



ஸ்பெயின் நாடானது அந்தந்த பகுதிகளுக்கு ஏற்ப வேளாண் சுற்றுலா தொடர்பான கொள்கைகளை வகுத்துள்ளது.

ஏனென்றால் வேளாண்மை என்பது ஒவ்வொரு பகுதிக்கும் வேறுபடும் தன்மை கொண்டது. அதனை ஒரே நேர்க்கோட்டில் அளவிடுதல் கூடாது. ஆம் நிலவும் தட்ப வெப்பநிலை, மண் வளம் வரை மற்றும் வளரும் பயிர் வகைகள் என ஒவ்வொரு பகுதிக்கும் வேறுபாடு இருக்கும். அதனையே இங்கு ஸ்பெயின் நாட்டின் வேளாண் சுற்றுலா தொடர்பான கொள்கை பறை சாற்றுகிறது.

அடுத்து வேளாண் சுற்றுலாவாசிகளுக்கு, வேளாண் சுற்றுலா பண்ணை வைத்திருப்போர் ஏற்படுத்தித் தர வேண்டிய பாதுகாப்பை அமெரிக்காவின் வேளாண் சுற்றுலா தொடர்பான சட்டம் வலியுறுத்துகிறது. இப்படி ஒவ்வொரு நாடும் தங்கள் நாட்டின் வேளாண் வளங்களுக்கு ஏற்ப வேளாண் சுற்றுலா தொடர்பான கொள்கை மற்றும் சட்டங்களை இயற்றி உள்ளன.

சர்வதேச புள்ளிவிவர கணக்கு: உலகளவில் 2019-ம் ஆண்டு வேளாண் சுற்றுலாவின் மதிப்பு 42.46 பில்லியன் டாலராக இருந்தது, அதுவே 2027-ம் ஆண்டு 62.98 பில்லியன் டாலராக உயரும் என்று ஆய்வறிக்கை கூறுகிறது. அத்துடன் 2019 முதல் 2027-ம் ஆண்டுக்கு இடையிலான காலகட்டத்தில் ஆண்டுக்கு 13.4 சதவீதம் அளவுக்கு வேளாண் சுற்றுலாவின் வளர்ச்சி இருக்கும் என்றும் அந்த ஆய்வறிக்கை கூறுகிறது.

மேலும் 2002 முதல் 2017 -ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் அமெரிக்காவில் விவசாயம் மூலம் கிடைக்கும் வருமானம் என்பது வேளாண் சுற்றுலா வழியே மூன்று மடங்கு பெருகியுள்ளது.

### அமெரிக்காவில் வேளாண் சுற்றுலா:

அமெரிக்க விவசாயிகளிடத்தில் வேளாண் சுற்றுலா பலத்த நம்பிக்கையை பெற்றுள்ள அதே வேளையில் சுற்றுலாவாசிகளிடத்தில் பெரும் வரவேற்பையும் பெற்றுள்ளது. குறிப்பாக சுற்றுலா வாசிகளுக்கு வேளாண் விளைபொருட்களை நேரடியாக விற்பதால் நல்ல லாபம் கிடைப்பதாக வேளாண் சுற்றுலா வைத்திருக்கும் விவசாயிகள் கூறுகின்றனர்.

2017-ம் ஆண்டின் புள்ளி விவர கணக்குப்படி 28,575 பண்ணைகளில் வேளாண் சுற்றுலா நடைபெறுவதாகவும், அதன் மூலம் சுமார் 949 மில்லியன் டொலர் அளவிலான வேளாண் விளைபொருட்கள் நேரடியாக விற்பனை செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

மேலும் வேளாண் சுற்றுலா பண்ணைகளை எடுத்துக் கொண்டால் பல்வேறு வகைகளில் சுற்றுலாவாசிகளை கவரும்படி வடிவமைத்துள்ளனர். உதாரணத்திற்கு பழம் மற்றும் காய்கறித் தோட்டங்களில் சுற்றுலாவாசிகளே அவர்களுக்கு வேண்டியதை நேரடியாக சென்று அறுவடை செய்து கொள்ளலாம். திராட்சை தோட்டங்களில் காய்த்திருக்கும் பழங்களை அறுவடை செய்து ஒயின் தயாரிப்பு பற்றி அறிந்து கொள்ளலாம்.

குழந்தைகளை அழைத்து வந்து பயிர்களை, பழங்களை அடையாளம் காட்டலாம். ஒரு வகையில் இது அவர்களிடையே வேளாண்மை சார்ந்த கல்வியறிவை ஊக்குவிக்கும். அத்தோடு அவர்களுக்கு உண்டான பொழுதுபோக்கு அம்சங்களும் நிறைந்து இருக்கின்றன. குதிரை சவாரி, பண்ணை குட்டைகளில் மீன் பிடிப்பு போன்றவைகளும் பொழுதுபோக்கு அம்சங்களாக உள்ளன.

இவை எல்லாவற்றையும் தாண்டி வேளாண் பண்ணைகளில் திறந்த வெளியில் நடக்கும் திருமணங்களுக்கு அமெரிக்காவில் நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது. ஆம், ஆண்டுக்கு 60 பில்லியன் டொலர் அளவிலான மதிப்பைக் கொண்டிருக்கும் திருமணம் தொடர்பான தொழிலில் வேளாண் சுற்றுலா பண்ணைகளும் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY
07
ஞாயிற்றுக்கிழமை
07.04.2024

# வரி விளம்பரம் — classified advertisement




## வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேரப் பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

-------------------------------------

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

-------------------------------------

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

-------------------------------------

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

-------------------------------------

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினைக் கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்குக் கணக்கு உதவியாளர் (Accounts Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்குப் பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

-------------------------------------

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்குச் சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

-------------------------------------

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

-------------------------------------

வாகனச் சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

-------------------------------------

## SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சிக் கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சுவையுடனான கோப்பிகள் 100g Tinகளில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

-------------------------------------

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்துச் சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே.

தொடர்புகளுக்கு - 0766482303

-------------------------------------

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

-------------------------------------

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

-------------------------------------

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு - 0777 421896 கிளிநொச்சி.

-------------------------------------

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள - 0779151820 கிளிநொச்சி.

-------------------------------------

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

-------------------------------------

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு

- 0773972309 மன்னார்.

-------------------------------------

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## மன்னாருக்குப் பெருமை சேர்க்கும் முத்துக்குளிப்பு - 03

# இலங்கை மற்றும் கிரேக்க - ரோமன் கடல்சார் வர்த்தக உறவுகள் என்ன?




நிஷாந்தி பிரபாகரன்


> மன்னார் தீவின் உயிர்ப்பல்வகைமையும் அதன் இயற்கை சூழலும் மன்னார் மக்களின் வாழ்வாதாரத்திற்கு மிகவும் இன்றியமையாத தொன்றாகும். மன்னார் கடற்கரைகள், மண் திட்டுகள், கண்டல் தாவர சூழல் தொகுதிகள், ரம்மியமான இயற்கை காட்சிகள், தேவாங்கு போன்ற வன விலங்குகள் மற்றும் பறவைகளை கொண்ட

இலங்கை மற்றும் கிரேக்க-ரோமன் கடல்சார் வர்த்தக உறவுகள் (இலக்கிய ஆதாரங்கள் மற்றும் தொல்பொருள் சான்றுகளின்படி)

இலங்கைக்கும் கிரேக்க-ரோமானுக்கும் இடையிலான வர்த்தக உறவு என்ன?.

இந்த நூலக ஆய்வைப் பயன்படுத்தி தரமான ஆராய்ச்சி முறையின் கீழ் நடத்தப்பட்டது. இந்த மூன்று மூலங்களி லிருந்தும் இலக்கிய ஆதாரங்கள், குறிப்பாக வெளிநாட்டு நூல்கள் இலங்கை மற்றும் கிரேக்க-ரோமன் வர்த்தகம் பற்றிய பல பதிவுகளைக் கொண்டுள்ளன. அந்த ஆசிரியர்களில் சிலர் காஸ்மோஸ், பிளினி,





12 Tamil divers fishing for pearls off the coast of Ceylon (c. 1925–29)

டோலமி மற்றும் ஸ்ட்ராபோ. மாந்தை, கொடவாயா போன்ற துறைமுகங்களி லிருந்தும் அனுராதபுரம், பொலன்னறுவை போன்ற இராச்சியங்களிலிருந்தும் சில தொல்பொருள் சான்றுகள் கிடைத்துள்ளன.

இலங்கைக்கும் கிரேக்க-ரோமானுக்கும் இடையிலான வர்த்தக உறவுக்கான முக்கிய தொல்பொருள் சான்றுகள் ரோமன் மற்றும் இந்தோ-ரோமன் நாணயங்கள் ஆகும். இந்த ஆராய்ச்சியை மேற்கொள்வதில் சில இந்திய காரணிகளும் முக்கியமா னவையாக இருந்தன, ஏனெனில் இலங்கை வர்த்தகம் இந்திய வர்த்தகத்துடன் நெருங் கிய உறவைக் கொண்டிருந்தது. இந்த ஆய்வின் மூலம் இலங்கையில் உள்ளக போக்குவரத்து அமைப்பு இருந்ததையும், ரோமானிய வர்த்தகம் இலங்கையில் பல இடங்களில் பரவியுள்ளது என்பதையும், சில சமயங்களில் இந்தியாவும் பாரசீகமும் இலங்கைக்கும் கிரேக்க ரோமானிய வர்த்தகத்துக்கும் இடையில் இடைத்தர கர்களாக செயல்பட்டதையும் நாம் கண்டறிந்த முக்கிய அம்சம் , இலங்கை பண்டைய வர்த்தக அமைப்பில் ஒரு மையமாக இருந்தது மற்றும் கி.பி ஐந்தாம் நூ ற்றாண்டில், இலங்கை இந்து சமுத்திரத்தின் முக்கிய வர்த்தக மையங்களில் ஒன்றாக இருந்தது.

இலங்கையின் பண்டைய கிரேக்க பெயர் "டப்ரோபேன்". ஜ1,26,31,30,40,43, 45,52,53,57ஸ "Taprobane" தவிர சில கிரேக்க ஆசிரியர்கள் இலங்கைக்கு 'Palaisimoundou', 'Salike' மற்றும் "Sieladiba" பெயர்களைப் பயன்படுத்தினர்.

எளிமையாக, Taprobane என்றால் "செப்புக் கரை" என்று பொருள்படும், இது "தம்பபன்னி"க்கு ஒத்த சொல்லைக் கொடுக்கிறது. …

Periplus Maris Erythraei" புத்தகத்தின் அறியப்படாத ஆசிரியர், தானே ஒரு வியாபாரி, இலங்கையின் முத்துக்கள், ரத்தினங்கள், மஸ்லின்கள் மற்றும் ஆமை ஓடுகள் போன்ற வளமான வர்த்தகத்தை விவரித்தார். ஜ30,32ஸ ரத்தினங்களில், ரூப் மற்றும் சிலோன் சபையர் ஆகியவை ரோமானியப் பேரரசின் காலத்தில் பிரபல மான மற்றும் மதிப்புமிக்க கற்களாக இருந்தன. Cosmos இன் கூற்றுப்படி, கிரேக்கர்கள் தவிர இலங்கை ரோமுடனும் வர்த்தக உறவைக் கொண்டிருந்தது. …

மன்னார் மாவட்டம் இலங்கையின் வட மாகாணத்தின் 5 மாவட்டங்களில் ஒன்றாகும். பல இயற்கை வளங்களை கொண்ட மன்னார் தீவானது 3-கிலோ மீட்டர் தரைப்பாலத்தின் வழியாக பிரதான நிலப்பகுதியுடன் இணைக்கப்பட்டுள்ளது. மன்னார் என்பதன் இயற்பெயர் மண்ணாறு ஆகும், பழங்காலத்தில் மன்னாரில் ஓடும் அருவி ஆறு மண்ணாறு எனவும் கதம்ப நதி எனவும் அழைக்கப்பட்டது.

இலங்கை தீவின் தென்கிழக்கு மூலையில் அமைந்துள்ள மன்னார் நகரம் பிரதான குடியேற்றமாகும். அதன் முக்கிய ஈர்ப்பு ஒரு போர்த்துகீசிய கோட்டை, நகரத்தின் நுழைவாயிலுக்கு அருகில்





உள்ளது, இது பின்னர் டச்சுக்காரர்களால் வலுப்படுத்தப்பட்டது. தீவின் மேற்கு முனையில் தலைமன்னார் உள்ளது. அங்கிருந்து படகுகள் முன்பு இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நிறுத்தப்பட்டன. தலைமன்னாரின் மேற்கில் ஆடம்ஸ் பாலம் உள்ளது. அரேபியர்களால் 15 ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதாக நம்பப்படும் பாபாப் மரங்களுக்கும் மன்னார் பிரபலமானது.

மன்னார் தீவின் உயிர்ப்பல்வகைமை




யும் அதன் இயற்கை சூழலும் மன்னார் மக்களின் வாழ்வாதாரத்திற்கு மிகவும் இன்றியமையாததொன்றாகும். மன்னார் கடற்கரைகள், மண் திட்டுகள், கண்டல் தாவர சூழல் தொகுதிகள், ரம்மியமான இயற்கை காட்சிகள், தேவாங்கு போன்ற வன விலங்குகள் மற்றும் பறவைகளை கொண்ட சரணாலயங்கள், வரலாற்று சிறப்பு மிக்க ஆலயங்கள், கோட்டைகள், பாலங்கள் உள்ளிட்ட பல தளங்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு அதிசய தீவாகும்.

இந்த தரிசு தீவு 2000 ஆண்டுகளுக்கும் மேலாக, ஒரு பரபரப்பான நகரமாக தொலைதூர வர்த்தகர்களையும் மன்னர்களையும் ஈர்த்தது. மன்னார் மாவட்டத்தின் பழம் பெருமைக்குச் சான்றாக மாதோட்டத்துறைமுகம் கொள்ளப்படுகின்றது. வரலாற்றுக் காலத்திற்கு முந்திய காலத்திலேயே இந்தியா உட்பட பிறநாட்டு வணிகர்கள் வந்து சென்ற துறைமுகமாக விளங்கிய பெருமை மாதோட்டத்திற்கு உள்ளது. பண்டைய காலங்களில், மன்னாரின் முத்து மீன்பிடி தொழில் வளர்ச்சியடைந்த போது, இந்த நகரம் உலகின் மிகப்பெரிய முத்து விநியோகஸ்தர்களில் ஒன்றாக அறியப்பட்டது. உலகெங்கிலும் உள்ள ராஜாக்கள் மற்றும் ராணிகளுக்கு ஏராளமான முத்துக்களை ஏற்றுமதி செய்தது. பல்வேறு கண்டங்களில் சிதறிக் கிடக்கும் அரசர்களும் அரசிகளும் மன்னாரிலிருந்து வழங்கப்பட்ட முத்துக்களை அணிந்திருந்தனர்

கி.பி. 1650 ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் படையெடுத்து வரும் வரை மன்னார் பிரதேசம் சகல வளங்களும் பொருந்தியதாக யாழ்ப்பாண இராச்சியத்தின் ஒரு பகுதியாக விளங்கியதாக வரலாறு கூறுகின்றது. மன்னாரின் முக்கியத்துவத்திற்கு அதன் பெரிய முத்து கரைகள் காரணமாக இருந்திருக்கலாம் (மன்னார் முத்துக்கள் ஃ முத்துக்குளித்தல் எனும் தலைப்பின் கீழ் விரிவாக பார்க்கலாம்)

### மன்னார் பழைய-புதிய பாலம்

ஒரு தரைப்பாலத்தால் பிரதான நிலப்பகுதியுடன் இணைக்கப்பட்டுள்ள மன்னார் பழைய பாலம் ஆரம்பத்தில் பிரதான நிலப்பரப்பையும் மன்னார்



தீவையும் இணைக்கும் ஒரே இணைப்பாக இருந்தது, இது 1930 களில் நிர்மாணிக்கப்பட்ட ஒற்றைப் பாதை கொண்ட பாலம் 1990 ஆம் ஆண்டு உள்நாட்டுப் போரின் போது அழிக்கப்பட்டது. (அதன் துண்டுகள் இன்னும் எஞ்சியுள்ளன) போர் முடிவடைந்தவுடன் பாலத்தின் நீளம் 3.14 கிமீ நீளத்திற்கு நீட்டிக்கப்பட்டு கட்டுமானம் தொடங்கப்பட்டது. மார்ச் 2010 இல் அதிகாரப்பூர்வமாக திறக்கப்பட்டது. இந்த இரண்டு வழி பாலம் யு14 மதவாச்சி - தலைமன்னார் நெடுஞ்சாலையின் ஒரு பகுதியாகும். உள்நாட்டுப் போரின் போது மன்னார் பெருநிலப்பரப்புடன் தொடர்பில்லாததால் அபிவிருத்தி செய்ய கடினமான பிரதேசமாக இருந்தது, ஆனால் தற்போது புதிய பாலத்தால் மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்பட்டு மன்னார் சுற்றுலாவிற்கு ஏற்ற மையமாகவும், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாகவும் மாறி வருகின்றது.

மன்னார் தீவை பிரதான நிலத்துடன் இணைக்கும் தரைப்பாலத்தின் ஊடாக மன்னார் தீவை அடையலாம். மன்னாருக்கு பயணிக்க பேருந்துகள் மற்றும் இரயில்கள் போன்ற பொது போக்குவரத்து வசதிகள் உள்ளன. தலை மன்னாரில் இருந்து மன்னார் மற்றும் மதவாச்சி வழியாக தொடருந்துப் போக்குவரத்து கொழும்பு வரை காணப்படுகின்றது கொழும்பிற்கு மன்னாரிலிருந்தும் வவுனியா ஊடாகவோ அல்லது நேரடியாக மதவாச்சியூடாகவோ பயணிக்கலாம்.

### பார்வையிட சிறந்த நேரம்

மன்னார் மாவட்டம் ஜூலை மற்றும் செப்டம்பர் மாதங்களுக்கு இடையில் அல்லது டிசம்பர் மற்றும் பெப்ரவரி மாதங்களுக்கு இடையில் மிகவும் இனிமையான வானிலை இருக்கும். ஏப்ரல் மற்றும் ஜூன் மாதங்களுக்கு இடைப்பட்ட கோடை காலத்தில், இப்பகுதியில் வெப்பநிலை ஏறக்குறைய தாங்க முடியாத அளவிற்கு உயரும், எனவே அந்த நேரத்தில் வருகையைத் தவிர்க்க பரிந்துரைக்கப்படுகிறது.

# வணிக மறுமலர்ச்சி அலகு

## Business Revival Units





AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

**சமீபத்திய ஆண்டுகளில் நிலவும் சவாலான மேக்ரோ பொருளாதார நிலைமைகள் வணிகங்களின் வருமானம் ஈட்டும் செயல்பாடுகளை சீர்குலைக்க வழிவகுத்தது, கடன் வாங்கியவர்களின் கடனை முறையாக திருப்பிச் செலுத்தும் திறனை மோசமாக பாதிக்கிறது மற்றும் உரிமம் பெற்ற வங்கிகளின் மீட்பு செயல்முறையை பாதிக்கின்றது. எனவே, BRUகளை அமைப்பது, உரிமம்பெற்றவங்கிகளின் செயல்திறன் மற்றும் செயல்படாத கடன் வாங்குபவர்களுக்கு உதவுவதற்கு இன்றியமையாததாகக் கருதப்படுகின்றது.**

உரிமம் பெற்ற வங்கிகளில் வணிக மறுமலர்ச்சி அலகுகளை நிறுவுவதற்கான வழிகாட்டுதல்களை மத்திய வங்கி வெளியிட்டுள்ளது.

Central Bank Issues Guidelines for the Establishment of Business Revival Units in Licensed Banks to Support Revival of Viable Businesses.

ஏற்கனவே நிறுவப்பட்ட கோவிட்-19க்கு பிந்தைய மறுமலர்ச்சி அலகுகளின் செயல்பாடுகளை மேலும் வலுப்படுத்தவும், வணிக மறுமலர்ச்சி அலகுகள் (BRUs) போன்ற அலகுகளை மறுசீரமைக்கவும், இலங்கை மத்திய வங்கி 28 மார்ச் 2024 அன்று உரிமம் பெற்ற வங்கிகளுக்கு பரந்த வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. முன்மொழியப்பட்ட BRU களின் மேம்படுத்தப்பட்ட நோக்கம், அசாதாரணமான மேக்ரோ பொருளாதார நிலைமைகளால் பாதிக்கப்பட்ட சாத்தியமான வணிகங்களின் நிலையான மறுமலர்ச்சியை எளிதாக்கும் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளின் அதிகரித்த பலவீனமான சொத்துக்களை சரியான முறையில் கையாளுவதை உறுதி செய்யும். இந்த வழிகாட்டுதல்களை உருவாக்கும் போது, மத்திய வங்கி, வங்கித் தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனம் உட்பட தொடர்புடைய பங்குதாரர்களின் கருத்துக்களைக் கோரியது.



சமீபத்திய ஆண்டுகளில் நிலவும் சவாலான மேக்ரோ பொருளாதார நிலைமைகள் வணிகங்களின் வருமானம் ஈட்டும் செயல்பாடுகளை சீர்குலைக்க வழிவகுத்தது, கடன் வாங்கியவர்களின் கடனை முறையாக திருப்பிச் செலுத்தும் திறனை மோசமாக பாதிக்கிறது மற்றும் உரிமம் பெற்ற வங்கிகளின் மீட்பு செயல்முறையை பாதிக்கின்றது. எனவே, BRUகளை அமைப்பது, உரிமம் பெற்ற வங்கிகளின்



செயல்திறன் மற்றும் செயல்படாத கடன் வாங்குபவர்களுக்கு உதவுவதற்கு இன்றியமையாததாகக் கருதப்படுகின்றது.

BRU களின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

● உரிமம் பெற்ற வங்கிகள் வலுவான வணிக மறுமலர்ச்சி மற்றும் மறுவாழ்வு கொள்கைகள் மற்றும் வணிகங்களின் மறுமலர்ச்சியை ஆதரிக்கும் நடைமுறைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

● 50 க்கும் மேற்பட்ட கிளைகளைக் கொண்ட பெரிய வங்கிகள், பாதிக்கப்பட்ட கடன் வாங்குபவர்களின் வணிகங்களை மிகவும் திறம்பட மற்றும் திறமையாக மறுமலர்ச்சிக்கு ஆதரிப்பதற்காக, பெரிய கிளைகள் ஃவங்கிகளின் பிராந்திய அலுவலகங்களில் டீசுரு களை நிறுவுவது குறித்து பரிசீலிக்கலாம்.

● உரிமம் பெற்ற வங்கியால் வணிக மறுமலர்ச்சியைக் கருத்தில் கொள்வதற்கு வணிகத்தின் அடிப்படை நம்பகத்தன்மை ஒரு முக்கிய காரணியாகும். நம்பகத்தன்மை மதிப்பீட்டில், நிதி மற்றும் நிதி அல்லாத குறிகாட்டிகள் கருத்தில் கொள்ளப்படுகின்றன. இந்த முறைமையினால் கடனாளியின் தொடர்ச்சியான ஒத்துழைப்பு அழுத்தமான வணிகத்தை புதுப்பிக்கும் செயல்முறைக்கு முக்கியமானதாக இருக்கும்.

●நிதி மற்றும் செயல்பாட்டு மறுசீரமைப்பு கருவிகள் மற்றும் செயல்முறைகள் மூலம் வணிகத்தை புதுப்பிக்க முடியும். மறுமலர்ச்சிக் கருவிகளின் பொருத்தமான தொகுப்பைத் தேர்ந்தெடுப்பது, மறுமலர்ச்சி செயல்முறையில் ஈடுபடும் தரப்பினரின் பரஸ்பர உடன்பாட்டிற்கு உட்பட்டது.

● பல வங்கிகளில் நிலுவையில் உள்ள கடன் வசதிகளைக் கொண்ட கார்ப்பரேட் கடன்வாங்குபவர்கள், தாங்கள் எதிர்கொள்ளும் நிதி மற்றும்/அல்லது வணிக நெருக்கடியைத் தீர்ப்பதற்கு, நீதிமன்றத் தலையீடு இல்லாமல், தன்னார்வ மற்றும் பரஸ்பரம் ஒப்புக்கொள்ளக்கூடிய அடிப்படையில் ”கார்ப்பரேட் ஒர்க்அவுட் கட்டமைப்பை” ஒப்புக்கொள்ளலாம். இந்த நோக்கத்திற்காக, ஒரு ”கார்ப்பரேட்” என்பது தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையின்படி ஆண்டு விற்பனை புரள்வு ரூ. 1 பில்லியன் அல்லது அதற்கு மேற்பட்டதாக, அல்லது உரிமம் பெற்ற வங்கிகளால் வழங்கப்பட்ட ஒட்டுமொத்த நிலுவையில் உள்ள கடன் வசதிகள் ரூ. ரூ. 250 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்டதாக இருப்பதை குறிப்பிடுகின்றது.

உரிமம் பெற்ற வங்கிகள் மே மாதம் 2024 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் BRU களை நிறுவ வேண்டும் என்றும், மேலும் 01 ஜூலை மாதம் 2024 ஆம் ஆண்டுக்குள் சுற்றறிக்கையின் தேவைகளுக்கு முழுமையாக இணங்க வேண்டும் என்றும் இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் கடன் வாங்குபவர்கள் ஆகிய இருவரையும், கடனாளிகளுக்குப் பயனளிக்கும் வகையில், பொருளாதார நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்டு, தேசியப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு பங்களிக்கும் வகையில், நீடித்து நிலைக்கக்கூடிய வகையில் வணிகங்கள் புத்துயிர் பெறுவதை உறுதிசெய்ய திறம்பட ஒத்துழைக்குமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்கின்றது.

இலங்கை மத்திய வங்கியின் வர்த்தக மறுமலர்ச்சி அலகுகளை (BRUs) ஸ்தாபிப்பது இலங்கைப் பொருளாதாரத்தை ஆதரிப்பதற்கான ஒரு செயலூக்கமான அணுகுமுறையைக் குறிக்கிறது. சமீபத்திய பொருளாதார சவால்களால் பாதிக்கப்பட்டுள்ள சாத்தியமான வணிகங்களின் மறுமலர்ச்சியை எளிதாக்குவதன் மூலம், டீசுரு க்கள் வணிக வளர்ச்சி மற்றும் தேசிய வளர்ச்சியை ஊக்குவிக்கும் அதே வேளையில் வங்கிகளுக்கான கடன் மீட்டெடுப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இந்த முன்முயற்சிக்கு உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் கடன் வாங்குபவர்களுக்கு இடையேயான ஒத்துழைப்பில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினருக்கும் வெற்றிகரமான முடிவை உறுதிசெய்ய வேண்டும். வினைத்திறனான அமுலாக்கத்துடன், டீசுரு க்கள் இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும் மேலும் நிலையான எதிர்காலத்திற்கு வழி வகுக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது.

+94-777-802-900 | Email: swaminathan@agsarma.com



Picture by Rohana Liyanapathirana

# தையல் வெறும் கலையல்ல அது வாழ்க்கை

**நேர்கண்டவர் - ஞானம் கவினி**

**சவால் என்றாலே அதனை சமாளிக்க வேண்டும் என்று தான் அர்த்தம். இதில் உடல் சவாலுக்கு பயந்து கொண்டு நாங்கள் உள்ளத்திற்கு பூட்டு போட்டுக் கொண்டு விடக் கூடாது. வலிக்கும் தான். வலிக்கின்ற தருணங்களில் அழுதுவிட்டு மீண்டும் கண்ணை துடைத்துக் கொண்டு உத்வேகத்துடன் செயல்பட வேண்டியது நாங்கள்தான். எல்லா வலுவும் உள்ளவர்களை விட நாங்கள் தான் மிகவும் மன உறுதியுடன் இருக்க வேண்டும்**

யாழ்ப்பாணத்தின் பூர்வீக நகரங்களில் ஒன்றான தெல்லிப்பளை பிரதேசத்தின் காங்கேசன்துறைப் பகுதியில் ,சுயதொழில் முயற்சி மூலம் பலருக்கு முன்னுதாரணமாக விளங்கிவரும் மகாலிங்கம் ராஜநந்தினியை தமிழர் பொருண்மியத்தற்காக செவ்வி கண்டோம்.

சுயதொழிலுக்கும் தொழில் துறை களுக்கும் பேர் போன காங்கேசன்துறை மண்ணில், தனது இளமைக்காலத்தை குதூகலத்துடன் கழித்து வந்திருக்கிறார் ராஜநந்தினி. பல வண்ண கனவுகளோடு பாடசாலை கல்வியை உயர் தரத்துடன் நிறைவு செய்த இவருக்கு தட்டச்சு துறை யில் டிப்ளமோ செய்யும் வாய்ப்பு கிடைத் திருக்கிறது.

மேற்படி துறையில் மிக விருப்பத்தோடு கற்று தேறிய இவர் டிப்ளமோ கல்வி ஆசிரியராகவும் இருந்திருக்கிறார். காலம் எப்போதும் ஒரே சீராக சுழன்று கொண் டிருப்பதில்லை தானே? அப்படித்தான் ராஜநந்தினி வாழ்க்கையிலும் அவர் எதிர் பாராத திருப்பங்கள் ஏற்பட்டு இருக்கிறது...

தனது உடல் நலக்குறைவின் காரணத்தினால் கால ஓட்டத்தில் தனது பணியையும் பணி சார்ந்த சூழலையும் மாற்றிக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது,

தொடர்ந்து படுக்கையில் அல்லது ஓய்வில் இருக்கும் போது ஒருவித மன உளைச்சலுக்கு ஆளாக வேண்டிய நிர்ப்பந்தம் எல்லோருக்குமே இருக்கும் ,ஆனால் அந்த தருணங்களை கடந்து வருவது இவருடைய வாழ்க்கையிலும் சவாலாக தான் இருந்திருக்கிறது..

சிட்டுக்குருவி போல தான் திரிந்த காலங்கள் பற்றி விவரிக்கும் ராஜநந்தினி, ஓய்வில் இருந்த காலங்களில் எல்லாம் , என்ன செய்வது?என்ன செய்வது? என்று குழம்பிக் கொண்டே இருந்தேன். ஆனால் ஏதாவது ஒன்று செய்து விட வேண்டும் என்பதில் நான் தீர்மானமாக இருந்த போது தான், ஓய்வாக மற்றும் எனக்கு விரும்பிய நேரங்களில் நான் செய்யக்கூடிய தொழிலாக இந்த தையல்கலையை ஆரம்பித்தேன்.

கொஞ்சமும் தனக்கு பரீட்சையும் இல்லாத இந்த தையல் தொழிலில் முதன் முதலாக காலடி எடுத்து வைக்கும் பொழுது ஒரு வித பதட்டமும் பயமும் இருந்ததாகவும் கூறும் ராஜநந்தினி இப்போது யாழ்ப்பா ணத்தின் மிகப்பெரிய புடவை நிலையங் களுக்கு ரெடிமேட் ஆடைகளை உற்பத்தி செய்து தரக்கூடிய ஒரு சிறந்த தையல் கலைஞராக இருக்கிறார் .

உங்கள் தொழில் முயற்சியின் ஆரம்ப காலகட்டத்தை பற்றி சொல்லுங்கள்? என்று அவரிடம் வினாவிய போது

உடல்நிலையினை கருத்தில் கொண்டு ஒரு பொழுதுபோக்கு ஆகவே நான் இந்த தொழிலை ஆரம்பித்தேன் என்னுடைய நேரத்தை பிரயோசனம் உள்ளதாக மாற்ற வேண்டும் என்று நினைத்தபோது எனக்கு முதலில் தோன்றியது தையல் கலைதான்.

ஆரம்பத்தில் எனக்கான ஆடைகளை நானே வடிவமைத்து கொண்டேன்.



**மகாலிங்கம் ராஜநந்தினி**

அதனைப் பார்த்த பலர் தங்களுக்கும் இதே போல ஆடைகள் வடிவமைத்து தருமாறு கேட்டுக் கொண்டனர்.



இப்படி 2000 ரூபா முதலீட்டோடு சிறுக சிறுக ஆரம்பித்த இந்த தொழில்

இப்பொழுது என்னை ஒரு சுய தொழில் முயற்சியாளராக அடையாளம் காட்டி இருப்பதோடு தன்னம்பிக்கையையும் விதைத்திருக்கிறது என்கிறார்.

குடும்பத்தில் உங்களுக்கான அங்கீகாரமும் ஒத்துழைப்பும் எப்படி இருக்கிறது என்று வினாவினோம்?

குடும்பத்தில் இரண்டு ஆண் சகோதரர்களுக்கு செல்லப் பிள்ளையாக இருந்த எனக்கு திடீரென்று ஏற்பட்ட உடல்நல குறைவு எனக்கு மட்டுமின்றி என் குடும்பம் சார்ந்த எல்லோருக்கும் ஒரு வித பதட்டத்தை தந்தது,

மிகுந்த மன உளைச்சலோடு போராடிக் கொண்டிருந்த அந்த நேரம் வீட்டிற்குள் முடங்கி போய்விடாமல் எனது காலத்தை சரியாக பயன்படுத்த வேண்டும் என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன்,

இதற்கு என்னுடைய குடும்பத்தினரும் பலத்த தூணாக என்னோடு நின்றனர்.

உண்மையில் இக்கட்டான காலகட்டங்களில் எங்களோடு அருகே இருக்கும் உறவுகள் தரும் பலம் தான் எங்களை இயங்க வைக்கிறது என்று நெகிழ்ச்சியோடு சொல்கிறார்,

எனக்கு தேவையான தையல் உபகரணங்களை வாங்குவது மற்றும் ஓடர்களை எடுத்து தருவது என்று எனது சகோதரர்கள் எனக்கு பெரிதும் உதவியாக இருந்தனர்.

சகோதரர்கள் மாத்திரம் அல்லாமல் என்னுடன் பழகும் நண்பர்கள் மற்றும் அயல் அவர்கள் கூட எனக்கு தேவையான சகல விடயங்களையும் நிறைவேற்றி தருவதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்

என்று மிகவும் மகிழ்ச்சியோடு கூறுகிறார்.

எனது உடல் நிலைக்கு ஏற்றவாறு சிறப்பு அம்சங்களைக் கொண்ட ஒரு சிறிய தையல் இயந்திரத்தோடு தான் இந்த தொழிலை ஆரம்பித்தேன் .

ஆனால் இப்போது நான்கு தையல் இயந்திரங்கள் மற்றும் ஏனைய சிறிய சிறிய கருவிகள் என்று ஒரு தையல் நிலையத்திற்கு தேவையான சகல உபகரணங்களையும் வாங்கி இருக்கிறேன்,

வரும் காலங்களில் ஒரு தையல் நிலையத்தை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறேன். இது ஒரு தொழில் கூடமாக மாத்திரம் அன்றி பலருக்கு நம்பிக்கையும் மகிழ்ச்சியையும் கட்டி எழுப்பக்கூடிய இடமாக இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

காலம் ஏகப்பட்ட பிரச்சினைகளை நமக்கு முன்னே வைத்தாலும், அவற்றையெல்லாம் தாண்டி ஓடுவதற்கான மன தைரியத்தை நாங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று உறுதிப்பட கூறுகிறார் ராஜ நந்தினி.

மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் தக்க வைத்துக் கொண்டால் போதும் மிகுதி எல்லாம் தானாக சரியாக அமைந்து விடும்.

உண்மையில் எங்களுக்கு முன்னால் இருக்கின்ற பிரச்சினைகள் எப்போதும் பூதாகரமாக தான் இருக்கிறது, உதாரணமாக ,நான் அதிக தூரம் பிரயாணம் செய்ய முடியாத நிர்பந்தத்தில் இருப்பதால் எனக்கான ஓடர்களையும் மற்றும் மூலப் பொருட்களையும் கொள்வனவு செய்து கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கிறேன் .

சிறிய சிறிய தேவைகளை உடனுக்குடனே நிறைவேற்ற முடியாத போது, மற்றவர்களில் தங்கி இருக்கிறோமோ என்ற குற்ற உணர்வு ஏற்படுவது உண்டு. ஆனாலும் இது எல்லாவற்றுக்கு மேலால் என்னில் அன்பு செலுத்தும் எனது உறவுகளால் நான் இப்போதும் தொடர்ச்சியாக பயணித்துக் கொண்டிருக்கிறேன் .

இப்படி குடும்ப உறவுகள் கிடைப்பது வரம் தான். உண்மையில் உடல் நலகுறைவினால் அவதிப்படுகின்ற பலருக்கு தேவைப்படுவது இதுதான் .

குடும்பத்தினர் மற்றும் உறவுகள் நண்பர்கள் முக்கியமாக “உன்னால் முடியும்” என்று தட்டிக் கொடுக்கின்ற உறவுகள் பக்கத்தில் இருந்தாலே நாங்கள் ஜெயித்து விடுவோம் என்கிறார் ராஜ நந்தினி.

சிறுவர்களுக்கான வண்ண வண்ண ஆடைகள் முதல் பிறந்தநாள் திருமண வீடுகள் போன்ற சிறப்பு நிகழ்வுகளுக்கான ஆடைகள் என்று மிகவும் விறுவிறுப்பாக ஓடிக்கொண்டிருக்கும் இவருக்கு தற்போது யாழ்ப்பாணத்தின் பிரபலமான வணிக ஸ்தலங்களில் இருந்தும் ஆயத்த ஆடைகளை உருவாக்குவதற்கான கேள்விகள் வந்து கொண்டிருக்கிறது.

தற்போது இரண்டு தொழிலாளர்களோடு இயங்கி வரும் இந்த நிறுவனம், இன்னும் சிறிய காலத்தில் பலருக்கு வேலை வாய்ப்பை வழங்கும் ஒரு மகிழ்ச்சியான மற்றும் உத்வேகமான நிறுவனமாக அமையும் என்று மிகவும் உற்சாகமாக கூறுகிறார்.

உடல் சவால் உள்ள பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்? என்று கேட்டோம் அவர் சொன்ன பதில் எம்மை ஆச்சரியப்பட வைத்தது.

சவால் என்றாலே அதனை சமாளிக்க வேண்டும் என்று தான் அர்த்தம். இதில் உடல் சவாலுக்கு பயந்து கொண்டு நாங்கள் உள்ளத்திற்கு பூட்டு போட்டுக் கொண்டு விடக் கூடாது. வலிக்கும் தான் வலிக்கின்ற தருணங்களில் அழுதுவிட்டு மீண்டும் கண்ணை துடைத்துக் கொண்டு உத்வேகத்துடன் செயல்பட வேண்டியது நாங்கள்தான்.

எல்லா வலுவும் உள்ளவர்களை விட நாங்கள் தான் மிகவும் மன உறுதியுடன் இருக்க வேண்டியவர்கள் என்கிறார்.

பொழுதுபோக்கு சாதனங்களுக்கும் சீரியலுக்கும் இடையில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் பலருக்கு மத்தியில் ராஜநந்தினி போன்ற தொழில் முயற்சியாளர்கள் உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியவர்கள்.

போராட்டம் எந்த மனிதனுக்கு தான் இல்லை ஆனால் அந்தப் போராட்டங்களில் என்றெல்லாம் மீண்டு தன்னை நிலைப்படுத்திக் கொள்பவன் மாமனிதன் ஆகிறான் என்கின்றனர் பெரியோர்கள்.

பல சவால்களைத் தாண்டி பெண்களுக்கும் தொழில் முயற்சியாளர்களுக்கு முன்னுதாரணமாக திகழும் மகாலிங்கம் ராஜநந்தினி போன்றவர்களை வாராவாரம் தமிழர் பொருணமியத்தில் நீங்கள் சந்திக்கலாம்.



**ஒரு காலத்தில், இலங்கையின் முக்கிய ஏற்றுமதிப் பொருளாக இருந்த தும்புத் தயாரிப்புகளை இப்போது யாராவது செய்தால் வீணாக மண்ணில் மக்கிப் போகும் தேங்காய் நார்கள் பயன்பாட்டுக்கு வரும். அருமையான இலவம்பஞ்சிலும் தேங்காய் தும்பிலும் தயாரிக்கப்பட்ட மெத்தைகள் இப்போது இல்லை. வெப்பத்தை கக்கும் செயற்கை மெத்தைகளும் தலையணைகளும் கிடைக்கின்றன. அவற்றில் படுத்து எலும்புகளை நாசம் பண்ணியிருக்கிறோம்**

# தென்னையின் நிலை

## எங்கள் வாழ்வும் வளமும்



**- தமிழ்க்கவி -**

“காணிநிலம் வேண்டும் பராசக்தி காணி நிலம் வேண்டும்” என்று பாடிய பாரதி, அங்கே ‘தூணில் அழகியதாய் நன்மாடங்கள் கட்டித்தரவேண்டும்.’ என்றும் அத்தோடு ‘பத்துப்பன்னிரண்டு தென்னைமரம் பக்கத்திலே வேண்டும்.’ எனவும்கேட்டார். அதென்ன தென்னைமரம். மாமரம் பனைமரம் பலாமரமெல்லாம் மரமில்லையா? அவை நிழல்தராதா?

இந்த தென்னை மரங்களுக்குத்தான் போகம் கிடையாது வாழையைப் போல இதுவும் வருடம் முழுதும் பயன்தரும் வாழை ஒரு தடைவ குலை போட்டதும் வீழ்ந்து விடும். தென்னை இடைவிடாமல் பூக்கும் காய்க்கும் காய்த்தபின் பூக்கும் பூவிலிருந்து பால் வரும். அதுவும் காலம் கடந்து போனால் நெய்யாக வரும். அந்த தேங்காய்நெய் கறிக்கும் தலைக்கும் வேறுபல தேவைகளுக்கும் என வீடுகளில் அன்றாடம் தேவைப்படும் பொருளாக இருக்கும். தென்னை மரத்திலிருந்து கள் பெறப்படும் அதிலிருந்து சாராயம்வடிப்பார்கள்.



அதுமட்டுமல்ல தென்னையின் ஓலை கிடுகாகும் தும்பு கயிறிகும் மெத்தையாகும் உதிரிகள் தேங்காய்த்தூசியாக இறுக்கி பதப்படுத்தி “கொக்கோபிட்” என விற்பனையாகிறது. தரமான மண்ணுக்குப்பதில் மாடித்தோட்டங்களில் இது பயனாகிறது. பசளையாகிறது. சிரட்டைக்கரி மட்டைகள் என அனைத்தும் பயன்பட்டது. இப்போது இல்லை. அவை வெறுமனே கொழுத்தப்படுகிறது. தேயிலை, ரப்பர், தெங்குப் பொருட்கள் என்பன இலங்கையின் ஏற்றுமதியில் முதலிடம் வகித்த மூன்று பொருட்கள் ஆகும்.

தோட்டப் பகுதிகளில் தேயிலைத் தோட்டங்களையும் கோப்பித் தோட்டங்களையும் உடைய பெரும் முதலாளிகள்தென்னந்தோட்டச்செய்கையில் முதலீடு செய்ய ஆரம்பித்த காலம் ஆயிரத்து தொளாயிரத்து பத்தொன்பதாம் நூற்றாண்டுதான். தெங்கு உற்பத்திசார்ந்து சோப், மாஜரின், தேங்காய் எண்ணெய், தேங்காய்த்துருவல், கொப்பறா என ஏற்றுமதிப் பொருட்களின் கேள்விகள் அதிகரித்தபோது தென்னந் தோட்டங்களுக்கான கேள்வியும் அதிகரித்தது. இலங்கையின் பெரும் பணக்காரர்கள் தென்னந்தோட்டங்களில் முதலீடு செய்தனர்.

தென்னையிலிந்து பெறப்படும்அனைத்து வளங்களையும் உற்பத்திக்கு தயார் செய்வதில் பலர் ஈடுபட்டனர். தும்புத் தொழிற்சாலைகள், செக்கு ஆலைகள் என நவீனமற்ற பொறிமுறைகளே இருந்தன. இந்தக்காலம் போல யந்திர சாதனங்கள் வரவில்லை. எனவே மனித வளங்களும் மாடுகளுமே பயன்பட்டன. ஐநூறு முதல் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் பயிரிட்ட தென்னை மரங்களால் மக்களுக்கான வேலை வாய்ப்புகளும் அதிகரித்தன. குருநாகல் புத்தளம் போன்ற மாவட்டங்களில் மிக அதிகமான மாடுகளால் இயக்கப்பட்ட செக்காலைகள் இருந்தன என வரலாறு சொல்கிறது. தேங்காய்களை தொகையாக உரிப்பதற்கு யானைகளும் உழைத்தன. அந்தக்காலத்திலும் தென்னைமரங்களை தாக்கிய வண்டுகள் இருந்தன. அவை கைகளால் பிடித்தோ



ஊசிகளால் குத்தியோ அழிக்கப்பட்டன என் அறியப்படுகிறது.

இன்றைய நிலையில் சாதாரண குடிமக்களின் சகல காணிகளிலும் தென்னை மரங்கள் இல்லாமல் இல்லை. தமது தேவைகளுக்காகவேனும் தென்னைகளை நடுகிறார்கள். இப்படி நடப்படும் தென்னைகள் கடவுளின் குழந்தைகள் போல ஊற்றப்படும் நீரையும் வெயிலையும் தாங்கி பாளைவிடுகின்றன. சிலருடைய மரங்கள் நன்கு காய்க்கின்றன. சில மரங்கள் நிறையவே பூத்தாலும் இரண்டொரு காய்களே காய்க்கிறது. ஓலைகள் குருத்து வரும்போதே நறுக்கப்பட்டுத் தொங்குகினறன. பிஞ்சுகள் தாறுமாறாக உதிர்கின்றன. இவை எதற்கும் காரணம் தெரியாமல் தென்னையை வைத்துக்கொண்டு விலை கொடுத்து தேங்காயை வாங்கி சமைக்கிறார்கள்.

இன்றைய எமது தென்னை மரங்களில் ஓலைகள் பச்சையாக இல்லை. அவை மேற்பகுதி கருப்பாகவும் கீழ்ப்பகுதி வெள்ளையாகவும் இருக்கின்றன. அவற்றின் மீது எறும்புகள் நிறைகின்றன. ஒன்றல்ல இரண்டல்ல ஒரு வீட்டில் இரண்டு வீட்டில் அல்ல. கிளிநொச்சியிலும் வவுனியாவிலும் மல்லாவியிலும் ஏன் யாழ்ப்பாபணத்திலும் இவை தென்படுகின்றன. இதன் பின் விளைவுகள் என்ன? ஓலைகள் மரத்திலேயே இற்றுவிடுவதால், அவை கிடுகாகவோ விளக்குமாறாகவே வராது. தேங்காய்கள் பூவாகவோ பிஞ்சாகவோ உதிர்வதால் காய்கள் வராது. இந்த கருமை மெள்ள மெள்ள வாழைகளுக்கும் ஏனைய பயிர்களுக்கும் பரவிக் கொண்டிருக்கிறது. நேரடியாக பாயனாகும் வெற்றிலை கீரை என்பவற்றிற்கு இது வந்தபோது தடுமாறி நிற்கிறோம். கறுப்பும் வெள்ளையும் மிரட்டுகிறது. ஏன்ன செய்யலாம்?

நாட்டின் விவசாய உற்பத்தி கருதி ஆரம்பிக்கப்பட்ட விவசாய விரிவாக்க அலுவலகத்தினருக்கு இது தெரியாதா? அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன? கமநல சேவை நிலையத்தினரால் பசளை விநியோகமும் விதைதானிய விநியோகமும் மட்டும் நடக்கிறது. மாமரங்கள் பற்றி கேட்டால் அதற்கு தனியாக ஆட்கள் இருக்கிறார் அவரைத்தான் கேட்கவேண்டும் என்பார்கள். தென்னை



பற்றி கேட்டால் அதற்கு தனியாக ஆட்கள் இருக்கிறார்கள் அவரைத்தான் கேட்கவேண்டும் என்கிறார்கள்.

அவர்களுடைய சேவை எமக்கு கிடைப்பதில்லை. மாமரங்களில் கிளைகள் அகற்ற அனுபவம் உள்ள தொழிலாளர்கள், உயரமான மரங்களுக்கு மருந்தடிக்கும் கருவிகள் தொழிலாளர்கள் வேண்டுமல்லவா? நாநூறு மரங்களை வைத்தவர் தனியாலக ஒரு தொழிலாளியை வைத்திருக்கலாம். நாலே நாலு மரம் வைத்திருப்பவரால் முடியுமா? சில ஒன்று கூடல் நிகழ்வுகளில் பெருமையாக இதெல்லாம் தாம் செய்வதாக சொல்கிறார்கள். தேவை ஏற்பட்டு கேட்டுப் போனால, "அடடா அவர் வேறெங்கோ போய்விட்டார். உடல் நலமில்லையாம் என்று ஏதேதோ சாக்குப் பொக்கு சொல்கிறார்கள். இந்த வகையில் சிறிய அளவில் பயிர் செய்யும் விவசாயிகளுக்கு விவசாய உற்பத்தி அபிவிருத்தி திணைக்களங்கள் பணத்தை அறவிட்டுக் கொண்டாவது உதவலாமல்லவா? அந்த சேவைகள் பற்றி இந்தி தொலைக்காட்சிகளிலும் யூரியூப் நிகழ்ச்சிகளிலும் பார்க்கும் பொழுது நமது நிலை கவலை தருகிறது.

இன்றைய தேங்காயின் சில்லறை விலை நூறு ரூபாவாக இருக்கிறது. அதுவும் கிளிநொச்சி மல்லாவிப் பகுதிகளில் அவ்வளவு மோசமான நிலை. தென்னை மரங்களை கமநல சேவை நிலையத்தில் பெற்று நட்டு ஐந்து வருடங்களாக அதற்கு பசளையும் தண்ணீரும் விட்டு வளர்ந்து அது காய்க்கும் போது பூக்கள் உதிர்கிறது என கமநல சேவை நிலைய போதன தசிரியரிடம் முறையிட்டாள் ஒருபெண். அவர் கொடுத்த பதிலாவது "நீங்கள் தரமற்ற தென்னம் பிள்ளைகளை நட்டிருக்கிறீர்கள் அதன் விளைவுதான் இது"

அவளும் விடாப்பிடியாக "நீங்கள் தந்த பிள்ளைதான் அது" என்றாள்.

"அப்ப நானில்லையே அது வேறு யாரோ அவரைத்தான் கேட்க வேண்டும்" என்றாரே பார்க்கலாம். முன்னர் தமது நிலையங்களிலேயே பதியனிட்ட தென்னம்பிள்ளைகளையே கொடுத்தார்கள். இப்போது மற்ற விவசாயிகளிடம் பெற்று அதை விநியோகிக்கிறார்கள். ஐந்து வருடங்களின் பின்னர்தான் அதன் தன்மை தெரியவரும். அதுவரை விவசாயி இலவமரத்துக்கு காவல் இருப்பதை அறிவதில்லை.

ஒரு காலத்தில், இலங்கையின் முக்கிய ஏற்றுமதிப் பொருளாக இருந்த தும்புத் தயாரிப்புகளை இப்போது யாராவது செய்தால் வீணாக மண்ணில் மக்கிப் போகும் தேங்காய் நார்கள் பயன்பாட்டுக்கு வரும். அருமையான இலவம் பஞ்சிலும் தேங்காய் தும்பிலும் தயாரிக்கப்பட்ட மெத்தைகள் இப்போது இல்லை. வெப்பத்தை கக்கும் செயற்கை மெத்தைகளும் தலையணைகளும் கிடைக்கின்றன. அவற்றில் படுத்து எலும்புகளை நாசம் பண்ணியிருக்கிறோம்.

# மரவள்ளி பயிர்ச்செய்கை

ஆனந்தன் பிரேம்நாந்
லக்சி பண்ணை



**இடைப்பயிர் தென்னை மரங்களிற் கிடையே ஊடு பயிராகச் செய்கை பண்ணுவதாயின் மரங்களிலிருந்து 2 மீற்றர் துரத்தில் நடல்வேண்டும். கலப்புப் பயிர்செய்கை முறையாக இருந்தால் ஊடுபயிராக சிறிய வெங்காயம், உளுந்து, பச்சைப்பயறு, கௌப்பி மற்றும் கொத்தமல்லி போன்ற குறுகிய காலப் பயிர்களை நடலாம்.**

இலங்கையில் தீவு முழுவதும் மரவள்ளி வளர்க்கப்படுகிறது.

மரவள்ளி கிழங்கின் உற்பத்தி முறைகள் கொல்லைப்புற பயிர் என அடையாளம் காணப்பட்டுள்ளன.

இலங்கையில் ஈரவலயத்தில் அதிகளவில் மரவள்ளி பயிர் செய்கை பண்ணப்பட்டு வருகிறது. (கம்பஹா, கொழும்பு, கேகாலை, இரத்தினபுரி, மாத்தளை மாவட்டம்) இடை வலயத்தில் தென்னை மற்றும் அன்னாசியுடன் (குருநாகல் மாவட்டம்) உலர் வலயத்தில் புத்தளம், அனுராதபுரம், அம்பாந்தோட்டை, மொனராகலை போன்ற மாவட்டங்களிலும். மற்றும் வட கிழக்கிலும் மானாவாரி முறையில் பெரிய அளவில் பயிர் செய்யப்படுகின்றது.

மகா பருவத்தில் (செப்டம்பர் - மார்ச்) உச்ச அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றது இலங்கையில் சிபாரிசுசெய்யப்பட்ட வர்க்கங்கள் பின்வரும் வர்க்கங்கள் பயிர்ச்செய்கைக்குச் சிபாரிசு செய்யப் பட்டுள்ளன. இவை கூடிய காபோவைதரேற்று மற்றும் உலர் பொருள், குறைந்தளவு பிறசிக்கமிலம் கொண்டன.

1. சுரனிமல (BW 1) இது களுத்துறை மாவட்டத்தில் இயற்கையான தெரிவுக்குட்பட்ட ஒரு வர்க்கமாகும்.

வெள்ளி சாம்பல் நிறமான தண்டின் நுனியில் கிளைவிடும் இளம் இலைகள் சிவப்புக் கபில நிறமானதோடு,

பச்சை நிறமான முதிர்ச்சியடைந்த இலைகள் கடும் செம்மஞ்சள் - சிவப்பு காம்பினைக் கொண்டது. கிழங்குகள் கபில நிறமான வெளித் தோலையும் வெண்ணிறமான கிழங்குகளையும் கொண்ட நீண்டனவாகும். சராசரி விளைச்சல் ஹெக்டயரொன்றிற்கு 35-50 தொன்களாகும்.



2. ஸ்வர்ணா (BW 2) வெள்ளி சாம்பல் நிறமான தண்டின் நுனியில் கிளை விடாது.

இளம் இலைகள் சிவப்பு கபில நிறமானதோடு பச்சை நிறமான முதிர்ச்சியடைந்த இலைகள் காணப்படும்.

கடும் சிவப்பு நிறக் காம்பினைக் கொண்டவை.

மத்திய அளவான கிழங்குகளின் வெளித்தோல் கபில நிறமானவை. கிழங்குகள் மஞ்சள் நிறமானவை.

சராசரி விளைச்சல் ஹெக்ரெயர் ஒன்றிற்கு 35 - 40 தொன்களாகும்.

3. ஷானி (BW14) இது கொழும்பு மாவட்டத்திலுள்ள விவசாயிகளினால் தெரிவு செய்யப்பட்டதொரு வர்க்கமாகும்.

கடும் கபில நிறமான தண்டு காலம் செல்ல கிளைவிடும். இலைகளும் காம்பும் பச்சை நிறமானவை.

பெரியளவான கிழங்குகளின் வெளித்தோல் கபில நிறமானவை. கிழங்குகள் வெண்ணிறமானவை சராசரி விளைச்சல் ஹெக்டயரொன்றிற்கு 35-40 தொன்களாகும்.

4. கிரிகாவடி குறுகிய காலத்தில் அதிக விளைச்சலைத் தரக் கூடியது. அதிக உலர் பொருளையும் காபோவைதரேற்றையும் கொண்டுள்ளது. குறைவான நச்சுப் பதார்த்தத்தையும், வேறு பல விசேட இயல்புகளையும் கொண்ட இனமாகும். ஆறு மாதத்தில் அறுவடை செய்யும் போது 20 தொன் விளைச்சலையும், 11 மாதத்தில்





அறுவடை செய்யும் போது 60 தொன் விளைச்சலையும் ஒரு ஹெக்ரயரில் தரக்கூடியது. பருவகாலங்களில் ஈரவலயத்திலும், நீர்ப்பாசனத்தின் கீழ் உலர் வலயத்திலும் செய்கை பண்ண முடியும். இவ்வர்க்கம் கன்னொறுவ மத்திய விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் தாவரவியல் பிரிவினரால் விருத்தி செய்யப்பட்டது. விரைவில் கிளைவிடக் கூடியது. 1.5 மீற்றர் உயரம் வரை வளரும். ஒரு தாவரத்தில் இருந்து 8 - 11 கிழங்குகள் வரை உற்பத்தியாகும். கிழங்கின் வெளித்தோலும் உட் தோலும் வெள்ளை நிறமாகக் காணப்படும்.

5. MU 51 (பேராதனைத் தெரிவு) இது உள்ளூர் பேதம் குறைவான கிளைவிடும் தன்மை கலப்புப் பயிர்ச்செய்கைக்கு ஏற்றது. வெள்ளைச்சதையும் ஊதா நிற உட்தோலும் கபில நிற வெளித்தோலும் கொண்டதால் தண்டிலிருந்து அகற்றுதல் இலகுவாகும். இவ் வர்க்கம் ஏற்றுமதிக்கு ஏற்றது. இதன் சராசரி விளைச்சல் ஹெக்டயரொன்றிற்கு 35-40 தொன்களாகும்.

6. சி.ஏ. ஆர். ஐ. - 555 உள்ளூரில் விருத்தி செய்யப்பட்டது. குறைந்த கிளைவிடும் தன்மை கொண்டது. கலப்புப் பயிர்ச் செய்கைக்கு ஏற்றது. இதன் சதை. பால் போன்ற வெள்ளை நிறமானது. உட்தோல் மென் ஊதா நிறமானது. வெளித்தோல் கபில நிறமானது. சமைக்கும் தரம் சிறந்தது. இதன் சராசரி விளைச்சல் ஹெக்டயரொன்றிற்கு 35-40 தொன்களாகும். மரவள்ளி இனங்களில் 4 மாதத்தில் அறுவடை செய்யக்கூடியது 6 மாதத்தில் அறுவடை செய்யக்கூடியது 9 மாதத்தில் அறுவடை செய்யக்கூடியது 12 மாதத்தில் அறுவடை செய்யக்கூடியது என பல இனங்கள் உள்ளது. இதில் 6 மாதத்திற்கு மேற்பட்ட ரகங்களே சிறப்பானதாக இருக்கும்

### மரவள்ளி - தாவரத்தின் வளரியல்பு

1. தண்டுமூலம் இனப்பெருக்கம் செய்யப்படுகின்றது. தண்டு பகுதியை நடவு செய்வதன் மூலம் புதிய தாவரமாக வளர்கிறது. தண்டு முளைக்கும் தன்மையானது இதன் சேமிப்புணவில் தங்கியுள்ளது. முளைகள் தண்டிலிருந்து வளரும்போது அதற்குத் தேவையான உணவு 3 - 4 கிழமைகளுக்கு மட்டும் தண்டிலிருந்து வழங்கப்படுகிறது. பின்பு இலையினூடாக அதன் ஒளித்தொகுப்புச் செயற்பாட்டின் மூலம் கிடைக்கின்றது.

2. தண்டு நடப்பட்டு 3 - 4 நாட்களில் வேர் உண்டாகின்றது. இங்கு இருவிதமான வேர்கள் உண்டாகின்றன. பக்க வேர், ஆணிவேர் ஆகும். ஆணிவேரிலே உணவு சேமிப்பதன் மூலம் கிழங்காக மாறுகிறது.

3. தண்டுகளில் அரும்புகள் நிலத்திற்கு மேலான கணுக்களிலிருந்து உருவாகும். தாவரம் நடப்பட்டு 25ம் நாள் தொடக்கம் வேரில் உணவு சேமிப்பு நடைபெறத் தொடங்கும். இது 60ம் நாள் மட்டும் விரைவாக நடைபெற்று பின்னர் குறைவடையத் தொடங்கும்.

4. உயர்ந்த நீண்ட தண்டு, நீண்ட இலைக்காம்பு என்பன காணப்படும். தண்டின் நிறம் பச்சை தொடக்கம் சிவப்பு கலந்த அல்லது கடும் சிவப்பு வரை மாறுபட்டுக் காணப்படும்.

5. இலைகள் யாவும் 5 - 7 வரையான பிரிவுகளைக் கொண்டு காணப்படுவதுடன் இவை வர்க்கத்திற்கேற்ப வேறுபட்டுக் காணப்படும்.

### மரவள்ளி பயிர்செய்கைக்கு ஏற்ற காலநிலை மற்றும் மண்:

மரவள்ளி ஒரு வெப்பமண்டல வேர் பயிர், உற்பத்தி செய்ய குறைந்தது 8 மாதம் வெப்பமான வானிலை தேவைப்படுகிறது. மரவள்ளியை நீர்ப்பாசனம் மற்றும் மானாவாரியிலும் நடுகை செய்யலாம். மலைப் பிரதேசங்களில் மானாவாரி முறையில் செய்யப்படுகிறது. நீர்ப்பாசன நிலைமைகளின் கீழ் இந்த பயிர் ஆண்டு முழுவதும் பயிரிடப்படலாம், காலநிலைத் தேவைகள் கடல் மட்டத்திலிருந்து 1200 மீற்றர் உயரம் வரையான பிரதேசத்தில் இதனைப் பயிரிடலாம்.

இப்பயிர் வரட்சியையும் தாங்கக்கூடியது. இது அயனமண்டல தாழ்நாட்டிற்கும் ஏற்றது. சூடான ஈரக் காலநிலையும் 25 - 29 பாகை சென்ரிகிறேட் வெப்பநிலையும் இப்பயிரின் வளர்ச்சிக்கு ஏற்றது. குளிர்ந்த அல்லது வறண்ட வானிலை போன்ற பாதகமான சூழ்நிலையில் பயிர் உற்பத்தி செய்ய 18 அல்லது அதற்கு மேற்பட்ட மாதங்கள் ஆகும்.

மரவள்ளி வெள்ளம் உறைபனி நிலைமைகளை பொறுத்துக்கொள்ளாது மண் மரவள்ளிப் பயிர்ச்செய்கைக்கு இருவாட்டி மண் சிறந்தது. எனினும் செம்மண், கரிசல் மண்களிலும் இதனைப் பயிரிடலாம். மண்ணில் கார அமிலத் தன்மைிஉ 4.5 முதல் 8.0 வரை சூரிய வெப்பத்தில் அதிக விளைச்சலை தரும்.



மற்றும் களிமண், வண்டல் மண் ஏற்றவையல்ல. நிலம் தயாரித்தல் மானாவாரி சூழ்நிலையில் பருவமழை தொடங்குவதற்கு முன் பயிரிட சிறந்த நேரம். பாரம்பரிய முறையில் நிலத்தைப் பண்படுத்தாது மண்ணைக் குவித்து துண்டங்கள் கிடையாகவோ அல்லது சாய்வாகவோ நடலாம்.

பொதுவாக மண்குவியல் 30-60 செ.மீ உயரத்திற்கு குவிக்கப்படும். மரவள்ளிச் செய்கைக்கு மண் 25-50 செ.மீ ஆழம் வரை ஒரு வார இடைவெளியில் 3 முறை நன்கு உழ வேண்டும். பிறகு ஒரு வாரம் கழித்து 10 டன் தொழுவுரத்தைக் கொட்டிப்பரப்பி மண்ணுடன் கலந்து விட வேண்டும்.

இதன்பின் தண்டுத் துண்டங்கள் மேடையில், வரம்புகளில் நடப்பட வேண்டும். மரவள்ளி நாற்றுகள் நோய் மற்றும் பூச்சி இல்லாத 8 முதல் 9 மாத முதிர்ந்த 2 முதல் 3 செ.மீ தடிமனான தண்டுகளில் மொத்த நீளத்தில் மேலே இருந்து 1ஃ3 ஐ தவிர்த்து கீழ் பக்கம் அதாவது நடுப் பகுதியிலிருந்து, 20 - 25 செ.மீ நீளமான 4 - 6 தண்டுத் துண்டங்கள் வெட்டி எடுக்கலாம்.

நடும் போது தண்டின் 2-3 அரும்புகள் நிலத்திற்கு மேலே விட்டு துண்டங்களை செங்குத்தாக மண்ணில் புதைக்கலாம். நடும்போது அரும்புகள் மேல் நோக்கி இருத்தல் அவசியம். எனினும் சில

தொடர்ச்சி 19 ம் பக்கம்....

# இலங்கை உலர் வலயத்தில் அப்பிள் பூத்து காய்க்குமா?





ஆசி கந்தராஜா. சிட்னி

**இந்தியா காஸ்மீரில் வளரும் அப்பிள், குறை குளிர் வகை (Low chill variety). அவை நுவரெலியாவின் மலை உச்சிகளில் காய்க்கும். ஆனால் ஐரோப்பிய வகை பூக்காது, காய்க்காது. இதே போல, நுவரேலியாவில் நன்கு வளரும் பிளம்ஸ் மரத்தை யாழ்ப்பாணத்தில் வளர்த்தால் அந்த மரம் நன்கு பூக்காது...**

அப்பிள் இலங்கையின் உலர்வலயத்தில் பூத்துக் காய்க்குமா? இல்லை என்பதே இதற்கான பதில்.

நல்ல இன அப்பிள் விதைகளை ஐரோப்பாவில் வாங்கிச் சென்று இலங்கை யின் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் விதைத்து வளர்க்கும் முயற்சியில் சிலர் முயன்றுள்ளதாக அறிகிறேன். இவர்களின் ஆர்வத்தைப் பாராட்டும் அதேவேளை, ஐரோப்பிய அப்பிள் இனங்கள் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் கிளைவிட்டு வளர்ந்தாலும் அவை ஒருபோதும் மொட்டரும்பி பூத்துக் காய்க்காது. வீணாக நட்டமடையாதீர்கள்!

அப்பிள் மரங்கள் கடும்குளிர் சுவாத்தியத் துக்கே உரித்தான பயிர்.

விஞ்ஞான ரீதியாக பழ மரங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை குறைகுளிர் வகை (Low Chill – பீச், பிளம்ஸ், சில அப்பிள் இனம்), நிறைகுளிர் வகை (High Chill - அப்பிள், ஐரோப்பிய இனம்), குளிர் தேவையற்ற வகை (No Chill - மா, பலா).

தாவர உடற் கூறு இயல்பின்படி அப்பிள் பூப்பதற்கும் காய்ப்பதற்கும் குறிக்கப்பட்டளவு மணித்தியாலங்கள் உறைகுளிர் (freezing temperature hours. Chilling hours) தேவை.

எனவே ஐரோப்பா மற்றும் ஆஸ்தி ரேலியாவின் குளிர் சுவாத்தியத்தில் வளர்ந்த அப்பிளை, இலங்கையின் வெப்பமான வலயத்தில் வளர்த்தால் அவை கிளைவிட்டு வளரும் ஆனால் பூத்துக் காய்க்காது.

அப்பிள் மரங்கள் வின்ரர் (Winter) காலங்களில் இலைகளை முற்றாக இழந்து அதன் நுனி மொட்டுக்கள் உறைந்துபோய் இருக்கும். இதையே வேறுவிதமாகச் சொன்னால் Winter காலங்களில் குறிக்கப்பட்டளவு மணித்தியாலங்கள் உறைகுளிர் அப்பிளுக்குத் தேவை. பின்னர் வசந்த காலங்களில் (Spring) வெப்பநிலை கூட மொட்டுக்கள் அரும்பி பூவாகி காய்க்கத் துவங்கும்.



குறிப்பாக விளக்கினால், வின்ரரில் கிடைத்த உறைகுளிர் நிலையின்போது, அப்பிள் தாவரத்தின் கலங்களுக்கு உள்ளே மொட்டரும்பி பூப்பதற்கான ஹோமோன் ஆயத்தங்கள் நடக்கும். (உறைகுளிர் கிட்டத்தட்ட 5 பாகை சதமளவுக்கு (ஊ) கீழே. இது அப்பிள் இனத்துக்கு இனம் மாறுபடும்).

இந்தியா காஸ்மீரில் வளரும் அப்பிள், குறை குளிர் வகை (Low chill variety). அவை நுவரெலியாவின் மலை உச்சிகளில் காய்க்கும். ஆனால் ஐரோப்பிய வகை பூக்காது, காய்க்காது.

இதே போல, நுவரேலியாவில் நன்கு வளரும் பிளம்ஸ் மரத்தை யாழ்ப்பாணத்தில் வளர்த்தால் அந்த மரம் நன்கு பூக்காது.

இதேபோன்றுதான் யாழ்ப்பாண மாமர இனங்கள் இலங்கையின் மத்திய மலைப் பிரதேசங்களில் நன்கு காய்ப்பதில்லை. இவையே பழமரங்கள் காய்ப்பதிலுள்ள சூட்சுமங்கள்!

அப்பிள் மர ஆராச்சியில் பல வருடங்கள் ஈடுபட்டவன் என்ற முறையில் இப்பதிவை எழுதியுள்ளேன்.

17ம் பக்கத் தொடர்ச்சி.....

இடங்களில் தண்டு கிடையாகவோ அல்லது ஒரு சரிவாக ஒரு கோணத்திலோ நடப்படுகிறது. நடவுத்தடி புதிதாக வெட்டப்பட்டதாகும், நன்கு மொத்தமானதாகவும், காயமற்றதாகவும் இருக்க வேண்டும்.

தண்டின் நுனிப்பகுதி நடுவதற்கு உகந்ததல்ல. முதிர்ந்த துண்டங்களே அதிகளவில் வேர் விடும் தன்மை கொண்டனவாகும். துண்டங்களைப் பெற்றுக் கொண்ட நாளிலோ அல்லது அடுத்த நாளோ நட வேண்டும். 20 லிட்டர் பஞ்சகவ்யா கலந்து, அக்கலவையில் விதைக்குச்சியின் முனையை மூழ்க வைத்து நிழலில் 15 நிமிடங்கள்வரை உலர்த்தி நட வேண்டும்.

நடவு முறை ஹெக்டயர் ஒன்றிற்கு 12,300 துண்டங்கள் தேவைப்படும் (90 ஒ 90 ச.மீ இடைவெளி,) பொதுவாக மழையுடன் நடுவது சிறந்தது. உலர் வலயத்தில் பெருமழையுடன் அல்லது நீர்ப்பாசனத்துடன் நடலாம். ஈரவலயத்தில் வருடம் முழுவதும் நடலாம்.

நடுகை இடைவெளி 1. தனிப்பயிராக அல்லது ஒரு வரிசை மட்டும் இடைப்பயிர்ச் செய்கை பண்ணுவதாயின் கூடிய கிளை விடும்தன்மையுள்ள நடுகைத்துண்டங்களை 120 ஒ 120 செ.மீ. இடைவெளியிலும், கிளைவிடும் தன்மை குறைந்த துண்டங்களாயின் 90 ஒ 90 செ.மீ. இடைவெளியிலும் நடலாம்.

ஏற்றுமதி பயிர்ச்செய்கைக்கு 60 ஒ 90 செ.மீ. இடைவெளியிலும் நடலாம். 2. மரவள்ளி நடும் பொழுது சிறுபோக பயிர்ச்செய்கை முறையாக இருந்தால் 90 × 90 செ.மீ. இடைவெளி இருத்தல் வேண்டும். மானாவரிப் பயிர்ச்செய்கை முறையாக இருந்தால் செடிக்குச் செடி 60 × 90 செ.மீ. இடைவெளி இருத்தல் வேண்டும்.

நீர்மேலாண்மை தொடர்ந்து மண்ணின் ஈரப்பதத்துக்கேற்ப தண்ணீர் பாய்ச்சினால் போதும். மரவள்ளி நட்ட மூன்றாம் நாள் உயிர்த் தண்ணீர் விட வேண்டும். பின்னர் வளர ஆரம்பித்ததும் ஒரு மாதம் வரை 3 நாள்களுக்கு ஒருமுறையும், பின் 2-ஆம் மாதம் முதல் 7 மாதங்கள் வரை 7 முதல் 10 நாள்களுக்கு ஒரு முறையும், நீர் பாய்ச்ச வேண்டும்.

அதன்பின் அறுவடை வரை 20 நாள்கள் இடைவெளியிலும் நீர் பாய்ச்ச வேண்டும். களைக்கட்டுப்பாடு • தாவரம் தரையை மூடி வளரும்வரை களைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். • கையினால் களைக்கட்டுப்படுத்தல் இலாபகரமானது.

• பயிர் நட்டு முதல் 3 - 4 மாதங்கள் பயிரிடையே களைகள் இல்லாதிருக்க வேண்டும். • பொதுவாக 1 - 3 தடவை களைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் 1. விதைத்த 7-ஆம் நாளுக்கு மேல் முளைப்பு தெரியும். 2. நட்டு 30-ஆம் நாளில் களை எடுத்து, ஒவ்வொரு செடியின் தூரிலும் ஒரு கைப்பிடி அளவு மண்புழு உரம் வைத்து மண் அணைக்க வேண்டும். அந்தச் சமயத்தில் விதைக் குச்சிகள் முளைக்காத இடங்களில் புதிய குச்சிகளை ஊன்ற வேண்டும்.

3. 45-ஆம் நாள், செடிகளில் நடுக்கிளையை மட்டும் விட்டுவிட்டு மற்ற கிளைகளை அகற்ற வேண்டும். தொடர்ந்து பக்க கிளைகளை அகற்றிக்கொண்டே வர வேண்டும். பக்க கிளைகள் வளர்ந்தால் கிழங்கு பெருக்காது. 4. 60-ஆம் நாளில் களை எடுத்து.. 200 லிட்டர் ஜீவாமிர்தத்தைப் பாசன நீரில் கலந்து விட வேண்டும்.

தொடர்ந்து, 20 நாள்களுக்கு ஒருமுறை ஜீவாமிர்தத்தைப் பாசன நீரில் கலந்து விட வேண்டும். 5. நட்டு 90-ஆம் நாளில் களை எடுத்து ஒவ்வொரு செடியின் தூரிலும் இரண்டு கைப்பிடி அளவு மண்புழு உரம் வைக்க வேண்டும். 5. 120-ஆம் நாளில் களை எடுத்து... 10 லிட்டர் தண்ணீருக்கு 300 மில்லி பஞ்சகவ்யா என்ற விகிதத்தில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் நிலம் முழுவதும் தெளிக்க வேண்டும். இறுதியாக களைகட்டலுடன் மண் அணைக்க வேண்டும்.

இடைப்பயிர் தென்னை மரங்களிற் கிடையே ஊடு பயிராகச் செய்கை பண்ணுவதாயின் மரங்களிலிருந்து 2 மீற்றர் தூரத்தில் நடல்வேண்டும். கலப்புப் பயிர்செய்கை முறையாக இருந்தால் ஊடுபயிராக சிறிய வெங்காயம், உளுந்து, பச்சைப்பயறு, கௌப்பி மற்றும் கொத்தமல்லி போன்ற குறுகிய காலப் பயிர்களை நடலாம்.

நடவு செய்த 60 தொடக்கம் 90 நாள்களில் ஊடுபயிரை அறுவடை செய்து, மேலுரம் இட்டு பின்னர் மண் அணைத்து நீர் பாய்ச்ச வேண்டும். சேதனப் பசளைகள் சேதனப் பசளையாக கோழியெரு அல்லது மாட்டெருவை ஒரு ஹெக்டயரிற்கு 10தொன் என்ற அளவில் பயன்படுத்தப்படுகின்றது இதனை நடுவதற்கு 3-5 நாட்களுக்கு முன்னர் பிரயோகிக்க வேண்டும்.

பூச்சிகள் மற்றும் நோய்கள்: - வெள்ளை ஈ: இவை இலைகளில் சாறை உறிஞ்சி உற்பத்தியை பாதிக்கும். மஞ்சள் தேமல் நோயை ஏற்படுத்தும் வைரஸ் கிருமி வெள்ளை ஈ மூலமாகப் பரவும். இதைக் கட்டுப்படுத்த வேப்பம் எண்ணை 1 லிட்டர்நீருக்கு 30 மில்லி அளவிலும், ஒட்டும் திரவம் 1 மி.லி அளவிலும் கலந்து தெளிக்கலாம்.

மாவுப்பூச்சி: மரவள்ளியின் இளம் தளிர், தண்டு மற்றும் இலையின் அடிப் பரப்பிலிருந்து காற்றை உறிஞ்சி சேதப்படுத்தும். நுனிக் குருத்துகள் உருமாறி வளர்ச்சி குன்றி காணப்படும். இடைக் கணுக்களின் நீளம் குறைந்து தண்டுகள் சிதைவடையும். இதைக் கட்டுப்படுத்த அசிரோபாகஸ் பப்பாயே என்னும் நன்மை செய்யும் ஒட்டுண்ணியை ஏக்கருக்கு 100 எண்ணிக்கையில் விடலாம்.

மாலத்தியான் பூச்சிக்கொல்லி 1 லிட்டர் நீருக்கு 1 மி.லி அளவில் கலந்துதெளிக்கலாம். இலைப்புள்ளி நோய்: பூஞ்சை மூலம் ஏற்படக்கூடிய இந்நோய் பாதித்த இலைகளில் பழுப்பு நிறப் புள்ளிகள் காணப்படும். இதைக் கட்டுப்படுத்த மாங்கோசெப் பூஞ்சாணக் கொல்லியை 1 லிட்டர் நீருக்கு 2 கிராம் கலந்து 15 நாள் இடைவெளியில் இருமுறை தெளிக்கலாம்.

கிழங்கு அழுகல்: நீர் தேங்கும் பகுதிகளில் கிழங்குகள் அழுகிவிடும். அதனால் முறையான வடிகால் வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். டிரைக்கோடெர்மா ஆஸ்பரெல்லம் உயிரிப் பூஞ்சாணத்தை ஏக்கருக்கு 1 கிலோ அளவில் நடவு செய்த உடனேயும் 3, 6-வது மாதங்களில் நிலத்தில் ஈரப்பதம் இருக்கும்போது எருவுடன் கலந்து தூவ வேண்டும். அறுவடை பயிரின் முதிர்ச்சிக்காலம் 8-10 மாதங்களாகும். எனினும் சில சமயம் விரும்பிய நேரம் அறுவடை செய்யலாம். மரவள்ளிக் கிழங்கை 9 முதல் 10 மாதங்களுக்குள் அறுவடை செய்துவிட வேண்டும். இதற்குமேல் தாமதமானால் கிழங்குகள் முற்றி வேர்கள் தடித்துவிடும். அதை சிப்ஸ் செய்யவோ, சவ்வரிசி செய்வதற்கோ இயலாது.

அறுவடைக்கான அறிகுறிகள். 10-ஆம் மாதத்துக்கு மேல் இலைகள் மஞ்சள் கலந்த பழுப்பு நிறமாகி உதிர ஆரம்பிக்கும். நிலத்தில் வெடிப்புகள் காணப்படும். அறுவடை செய்வதற்கு நான்கு அல்லது ஐந்து நாள்களுக்கு முன் நீர் பாய்ச்ச வேண்டும். தாவரத்தை கவனமாகக் கிழங்கு முறியாது பிடுங்குதல் அவசியம். மண் கடினமாக இருப்பின் கிழங்குகள் சேதமடைவதைத் தவிர்ப்பதற்கு பிடுங்க முன் தாவரங்களைச் சுற்றியுள்ள மண் ஓரளவு அகற்றப்பட வேண்டும்.

இங்கு பயிர் ஒரே நேரத்தில் அறுவடை செய்ய வேண்டிய அவசியமில்லை. பொதுவாக அறுவடை செய்த கிழங்குகளை மீண்டும் மண்ணுள் புதைத்து 10 நாட்கள் வரை சேமிக்கலாம். அடுத்த விதைப்புக்கு செடிகளிலிருந்தே விதைக் குச்சிகளை எடுத்து வைத்துக் கொள்ளலாம். உற்பத்தி ஏரு விளைச்சல் காலநிலை நிலைமைகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பயிர்ச்செய்கை உள்ளிட்ட பல காரணிகளைப் பொறுத்தது.

வழக்கமாக, கலப்பின/அதிக விளைச்சல் தரும் வகைகள் ஒரு ஹெக்டேருக்கு 30 முதல் 40 டன் வரை உற்பத்தி செய்கின்றன, குறுகிய காலத்திற்குள் ஹெட்டயருக்கு 25 முதல் 30 டன் உற்பத்தி செய்யலாம். கிழங்கின் சராசரி நிறை, ஒரு தாவரத்திலுள்ள கிழங்குகளின் எண்ணிக்கை, ஒரு ஹெக்டயரிலுள்ள தாவரங்களின் எண்ணிக்கை என்பவற்றைப் பொறுத்து விளைச்சல் வேறுபடலாம்.

# தேசியம் என்றால் ‘லட்சம்’ மலையகம் என்றால்

## இதுவே தேசிய கொள்கைகளின் லட்சனம்

**பல்வேறு ஆய்வுகளின் அடிப்படையில் சுமார் 3 இலட்சம் மலையக தோட்ட குடும்பங்களுக்கு காணி வழங்க வேண்டியுள்ள நிலையில், 4 ஆயிரத்திற்குள் தோட்ட மக்கள் உள்ளடக்கப்பட்டால் எந்த நூற்றாண்டின் இவர்கள் ஜகாணி உரித்துக்களை பெறுவார்கள்? எனும் பெரும் கேள்வி எழுகிறது.**



**ஜீவா சதாசிவம்**

எந்த இனத்தவராக இருந்தாலும் சட்டரீதியான காணி உரிமை தமக்கு கிடைக்க வேண்டும் என்பதே அனைத்து பிரஜைகளினதும் கனவாகும் என்ற வகையில், அவ்வாறான உரிமை சகலருக்கும் கிடைக்க வேண்டும், காணி உரிமை வழங்கும் “உறுமய“ தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் எதிரவரும் ஜ"ன் மாதமளவில் நிறைவு செய்யுமாறும் ஜனாதிபத ரணில் விக்ரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரண்டு மில்லியன் மக்களுக்கு காணி உரிமை வழங்குவதற்காக முன்னெடுககப்படும் உறுமய வேலைத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தின் 408 பேருக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் யாழ்ப்பாணம் - ஒட்டகப்புலம் பகுதியில் 2024 மார்ச் மாதம் நடைபெற்ற “உறுமய” காணி உரிமம் வழங்கும் வேலைத்திட்டத்தின் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அடையாள ரீதியாக காணி உறுதிப் பத்திரம் வழங்கிவைத்து மேற்படி கருத்தினை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் உரையின் பின்வரும் பகுதிகள் கவனத்துக்கு உரியன.

”அரச காலத்தில் காணி உரிமை மக்களிடமே காணப்பட்டது. பிரித்தானியர் காலத்தில் தரிசு நிலச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் காணிகள் அபகரிக்கப்பட்டன. அதன்படி நாட்டின் 80ூ காணிகள் அரசாங்கத்திற்கு சொந்தமானது. அந்த காணிகளுக்கான அனுமதிகளை மக்களுக்கு வழங்கியிருந்தாலும் காணிகளுக்கான உறுதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதனால் மக்களிடமிருந்து பெறப்பட்ட காணிகளின் உறுதிகளை மக்களிடம் மீளக் கையளிக்க எதிர்பார்க்கிறோம். அதனால்அனைவருக்கும் காணி உரிமம் வழங்க தீர்மானித்தோம். எதிர்வரும் 05,10 வருடங்களில் இந்த செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி வலுவானபொருளாதாரத்தைவழங்குவதற்கு நாம் செயற்பட்டு வருகின்றோம்”

மேற்படி நம்பிக்கை தரும் வசனங்களை வரவேற்கும் அதே வேளை பெருந்தோட்ட மக்களுக்கான காணி உரிமைகளை வழங்குவதற்காக முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றும், 2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட யோசனை ஊடாக இந்த திட்டம் முன்வைக்கப்பட்டிருந்தது என்றும், இந்த வேலைத்திட்டத்தின் கீழ் பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் அரசுக்கு சொந்தமான பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 4,151 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் செய்திகள் இவ்வார முதற் பகுதிகளில் வெளியாகியுள்ளன.

குறித்த மக்கள் தற்போது நிரந்தரமாக வாழும் காணிகளுக்கான உறுதிகளை வழங்குவதற்காக ஜனாதிபதி மற்றும் நீர்வழங்கல், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட ஒருங்கிணைந்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. வரவேற்கத்தக்க விடயமாகும். இது காலத்தின் தேவையும் கூட. இத்தகைய தனியார் தோட்ட தொழிலாளர்களுக்கு காணி உரிமை வழங்கப்பட வேண்டியது கட்டாயம் என்பதுடன் அது இவ்வாறான தனியான கொள்கை பத்திரம் ஒன்றின் ஊடாக வழங்கப்பட வேண்டும் என்பதும் மிக மிக சரியானது.

ஆனால் இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற கொள்கை பத்திரம் தனியே கணக்கிடப்பட்ட இந்த 4151 வீட்டு உரிமையாளர்களுக்கு மாத்திரமா அல்லது இவ்வாறு தனியார் தோட்டங்களில் வதியும் தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி உரிமை வழங்கப்பட வேண்டும் என்கின்ற நிலையான அரச கொள்கை பத்திரமா? என்பது தொடர்பில் தெளிவில்லாமல் உலாவுவதையும் ஒட்டு மொத்த மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு இது

வழங்கப்படுமா? என்ற சந்தேகமும் கேள்வியும் எழுகிறது.

எனவே குறித்த அமைச்சரவை பத்திரம் ஆழமான ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய அவசியமும் ஏற்படுகின்றது. முன்பு பெருந்தோட்ட பகுதிகளாக இருந்து பின்னர் அவை சிறுதோட்ட உடமைகளாக மாற்றம் செய்யப்பட்டபோது அதற்குள் அகப்பட்டு கொண்ட இலட்சக்கணக்கான தமிழ் தோட்ட தொழிலாளர்கள் இன்னும் பாழடைந்த லயன் குடியிருப்புகளில் மேல், தென் மாகாணங்களில் பெருமளவில் வாழ்கின்றனர். குருநாகல் பகுதியில் வாழ்கின்றனர். வேறு மாவட்டங்களிலும் இவ்வாறு வாழலாம்.

நுவரெலியா மாவட்டத்தில் கூட இத்தகைய சிக்கல் எல்லை பிரதேசங்களில். காணி உறுதிப்பத்திரம் இலட்சக்கணக்கான மக்களுக்கு தேவை இருக்கின்ற பட்சத்தில் சில ஆயிரங்களுக்குள் அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்து ஒட்டுமொத்த பிரச்சனையும் தீர்க்கப்பட்டு விட்டதான ஒரு தோற்றப்பாட்டை காட்டுவதை முழுமையான தீர்வாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஆரம்ப கட்டமாக இவ்வாறான அறிவிப்பு வெளியாகியிருப்பதை வரவேற்கலாம்.மலையக மக்களின் காணி உரிமை குறித்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆரம்பத்தில் இருந்தே ஒரு தெளிவு இருக்கிறது என்பதை நல்லாட்சி காலத்தில் இருந்தே இருந்து வருகின்றது.

சமர்பிக்கபட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள அமைச்சரவை பத்திரத்தின் படி பிராந்திய பெருந்தோட்ட கம்பெனிகள் அதாவது ஆர் பி சி (RPC) தோட்டங்களில், அரச கூட்டுத்தாபன தோட்டங்களிலும் வாழும் சுமார் 4000 அளவான தோட்ட தொழிலாளர்களுக்கு காணி உரித்து வழங்குவதற்காக மாத்திரமே இந்த அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அங்கு லட்சக்கணக்கான குடும்பங்களுக்கு அதற்கான தேவை இருக்கிறது. தவிரவும் தனியார் தோட்ட தொழிலாளர்கள் பற்றி ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை. இத்தகைய குளறுபடியான பத்திரங்கள் குறித்து மிகுந்த அவதானம் தேவை.

2015 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட 100 நாட்கள் ஆட்சியில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்தில் 100 நாள் அரசாங்க காலத்தில் தோட்ட தொழிலாளர்களுக்கு 7 பேர்ச்சஸ் காணி என குறிப்பிடப்பட்டதன் காரணமாக 100 நாட்களின் பின்னர் அமைந்த அரசாங்கத்தில் அந்த அமைச்சரவை பத்திரம் வலுவற்றதானது.பெருந்தோட்ட அமைச்சு அதிகாரிகள் அந்த அமைச்சரவை பத்திரம் 100 நாட்களில் காலாவதியாகி விட்டதான ஒரு கருத்தை முன்வைக்க, இது குறித்து பாராளுமன்றத்தில் முன்னாள் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். திலகராஜ் அப்போது சபையில் டுத்துரைத்திருந்தார்.

அதற்குப் பின்னதாக மலைநாட்டு புதிய கிராமங்கள் அமைச்சு, காணி அமைச்சு, பெருந்தோட்ட அமைச்சு ஆகிய மூன்றும் இணைந்த புதிய அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டே நல்லாட்சி காலத்தில் பல வீட்டுரிமை காணிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. இவ்வாறு நுணுக்கமாக இத்தகைய அமைச்சரவை பத்திரங்களை ஆராய்தல் அவசியமாகும். இங்கே குறிப்பிடப்பட்டுள்ள அமைச்சரவை பத்திரத்தில் வரவேற்கத்தக்க அம்சமாக இந்த வேலை திட்டத்தை புதிய கிராமங்கள் அமைப்பதற்கான அதிகார சபை அதாவது மலையக அதிகார சபையின் ஊடாக முன்னெடுக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டு இருப்பதாகும்.

எனவே அதிகார சபை உருவாக்கப்படும் அதனை காணாமல் செய்யப்பட்டு இருக்கும் இந்த சூழலில் இந்த அமைச்சரவை பத்திரத்தின் ஊடாக அது இயங்குமானால் அது வரவேற்கத்தக்கது.தேசிய வேலைத் திட்டத்துக்கு அமைவாக 20 இலட்சம் பேருக்கு காணி உறுதி வழங்கப்பட வேண்டும்என்றதொருகொள்ளைத்தீர்மானம் எடுத்திருக்கின்ற நிலையில், "எந்த இனத்தவராக இருந்தாலும் சட்டரீதியான காணி உரிமை தமக்கு கிடைக்க வேண்டும் என்பதே அனைத்து பிரஜைகளினதும் கனவாகும்" என ஜனாதிபத கூறியுள்ள நிலையில் மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களுக்கான காணி உறுதிப்பத்திரம் வழங்கும் வியடம் சில ஆயிரத்துக்குள் (4115) உள்ளடக்கப்பட்டுள்ளமை வருந்தத்தக்க விடயமாகும்.

பல்வேறு ஆய்வுகளின் அடிப்படையில் சுமார் 3 இலட்சம் மலையக தோட்ட குடும்பங்களுக்கு காணி வழங்க வேண்டியுள்ள நிலையில், 4 ஆயிரத்திற்குள் தோட்ட மக்கள் உள்ளடக்கப்பட்டால் எந்த நூற்றாண்டின்இவர்கள்ஜகாணிஉரித்துக்களை பெறுவார்கள்? எனும் பெரும் கேள்வி எழுகிறது.

"பிரித்தானியர் காலத்தில் தரிசு நிலச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் காணிகள் அபகரிக்கப்பட்டன. அதன்படி நாட்டின் 80மூ காணிகள் அரசாங்கத்திற்கு சொந்தமானது" எனும் ஜனாதிபதியின் கூற்றில் இரண்டு விடயங்கள் கவனத்துக்கு உரியன.

1. பிரித்தானியர் காலத்தில் தரிசு நிலச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் காணிகள் அபகரிக்கப்பட்டன என்பது. இங்கு பிரித்தானியர் அபகரித்தனர் என்பதற்கு அப்பால் சட்டத்தின் கொள்முதல் செய்து ( சிறு பெறுமதி என்பது வேறு விடயம்.) பெருநந்தோட.டப்பயிர்ச்செய்கைகளை உருவாக்கினர்.

2. அவ்வாறு பிரித்தானியர் பெற்றுக் கொண்ட காணிகள் இலங்கைக் குடியரசானதன் பின்னர் அரசுடமையானது. இந்த இரண்டு விடயங்களும் மலையக பெருந்தோட்ட மக்களது காணி உரிமை யுடன் தொடர்பு உடையது.

பெருந்தோட்ட முறைமை உருவாக்கப்பட்டு இருநூறு ஆண்டுகாலமாக அந்த மண்ணையே நம்பி வாழும் சுமார் 10 லட்சம் மக்களுக்கு 4 ஆயிரம் காணி உரித்துகளை மாத்திரம் வழங்கி, வடக்குத் தமிழ்மக்களுக்குஉறுதிஅளித்ததுஜபோன்ற வளமான வாழ்வாதாரத்துக்கு வழி செய்வோம் என மலையகப் பெருந்தோட்ட மக்களைப் பார்த்து ஜனாதிபதியால் கூறமுடியுமா? "சகல இன மக்களுக்குமானது காணி உரிமை" என கூறும் ஜனாதிபதி ரணில் மலையக மக்களை ஒரு தேசிய இனமாக க் கருதினால் 20 லட்சத்தில் மூன்று லட்சம் என மலையகத் தமிழரின் காணி உரிமைப் பிரச்சினையைத் தீர்வு காண அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்து இருக்க வேண்டும். மாறாக தேசிய ரீதியில் லட்சங்களிலும் மலையகம் என்றால் ஆயிரங்களிலும் என சுருக்கிக் கொள்வதை பாரபட்சம் என கொள்ளாமல் வேறு எப்படி கொள்வது. அவருக்குத் துதி பாடி காவடி எடுத்து பின்னால் ஓ(ஆ)டும் மலையகத் தலைமைகள் என்போரையும் எங்கே வைப்பது?



# அலுவலகம்தான் வாழ்க்கையா?!

**வெற்றிகரமான வேலையைக் கொண்டிருக்க குறுக்கு வழிகள் ஏதுமில்லை. தொழிலில் வெற்றி பெற்றவர்கள் அனைவருமே கடினமாக உழைப்பதன் மூலமே அந்த வெற்றியை அடைந் துள்ளனர். அதே சமயம், துரதிர்ஷ்ட வசமாக கடின உழைப்பும் நீண்ட நேர உழைப்பும் உற்பத்தித்திறனுக்கும் வழிவகை செய்வதில்லை.**



பேராசிரியர் மார்க் க்ரோப்லி

இன்றைக்கு அலுவலகத்தில் வேலை பார்க்கும் பலரது பிரச்னை, வேலையை முடித்து விட்டு, வீட்டுக்கு வந்த பின், வேலை செய்துகொண்டே இருக்க வேண்டியிருக்கிறது என்பதுதான். இதனால், குடும்பத்தைக் கவனிக்க முடியாமல் போய், கணவன் - மனைவிக்கு இடையே மோதல் வரத் தொடங்கிவிடுகிறது.

சரியான நேரத்தில் அலுவலகத்தை விட்டு வீட்டுக்குப் புறப்பட வேண்டும் அதே சமயம், அதிக வேலைகளை முடிக்க வேண்டும்! இது சாத்தியமாவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதே இன்றைக்குப் பலரும் கேட்கும் கேள்வியாக இருக்கிறது.

சரியான நேரத்துக்குள் அதிக வேலை களை முடிக்கும் வழிகளைச் சொல்லித் தருகிறது 'தி ஆஃப் ஸ்விட்ச்' (The Off Switch) என்னும் புத்தகம். இங்கிலாந்தில் வசிக்கும் பேராசிரியர் மார்க் க்ரோப்லி எழுதிய புத்தகம் இது.

### எதற்கு வேலைக்குப் போகிறோம்?

நாம் அனைவரும் எதற்காக வேலைக்குச் செல்கிறோம். பணத்துக் காகத்தான். இதைத் தவிர, வேறு காரணம் ஏதுமில்லையா? நிச்சயமாக இருக்கிறது. ஆக்டிவ்வாக இருக்கவும், உற்சாகமாக இருக்கவும், வாழ்க்கைக்கு ஒரு ஸ்ட்ரக்சரைத் தரவும், சோஷியலாக பலருடன் பழகவும் நமக்கு வேலை என்பது அவசியமான ஒன்றாகிறது.

வெற்றிகரமான வேலையைக் கொண்டிருக்க குறுக்கு வழிகள் ஏது மில்லை. தொழிலில் வெற்றி பெற்றவர்கள் அனைவருமே கடினமாக உழைப்பதன் மூலமே அந்த வெற்றியை அடைந் துள்ளனர். அதே சமயம், துரதிர்ஷ்ட வசமாக கடின உழைப்பும் நீண்ட நேர உழைப்பும் உற்பத்தித்திறனுக்கும் வழிவகை செய்வதில்லை.

அதே போல, கடின உழைப்பு மட்டுமே வெற்றிக்கு வழிவகுப்பதில்லை. வெற்றிகரமான மனிதர்கள் கடுமையாக உழைக்கவும் அதே அளவுக்குத் தங்களை ரிலாக்ஸ் செய்துகொள்ளவும் தெரிந்து வைத்துக்கொண்டவர்களாக இருக் கின்றனர்.

### ஆளை விழுங்கும் வேலை

வேலை என்பது மனித வாழ்வில் மிகப் பெரிய பங்களிப்பைக் கொண்டிருப்பது. கொஞ்சம் அசந்தால் அது நம்மை முழுமையாக விழுங்கிவிடும். நாம் ஒரு நாளில் தூங்காமல் விழித்திருக்கும் நேரம் முழுவதும் வேலை குறித்த எண்ணமும் சிந்தனையும் நம்மை ஆக்கிரமிப்பு செய்துவிட வல்லது. அதுவும் இன்றைக்கு மொபைல் டிவைஸ்களும் இணையமும் அதிக அளவில் பயன்படுத்தப்படுவதால், இதற்கான வாய்ப்பு மிக மிக அதிகம்.

மொபைல் டிவைஸ்கள் நம்மை அலுவலகத்தில் இருந்து விடுவிப்பதற்கு உதவும் என்று நினைத்தால், அது நாம் அலுவலகத்தை விட்டு போன பின்னும் நம்மை வேலையுடன் மீண்டும் பிணைத்துவிடுகிறது. மாலை வேளையில் அலுவலக ஈ-மெயில்களை செக் செய்து பார்த்து, எவ்வளவுதான் வேலை செய்வது என்று அங்கலாய்த்தும், நாளைய மீட்டிங்கை நினைத்து இரவு தூக்கம் வராமல் புரண்டு படுத்துக்கொண்டும் பலரும் குமைந்து கொண்டிருக்கிறார்கள்.

### அலுவலகத்தை விட்டுச் செல்லும்போது

"அலுவலகத்தை விட்டுக் கிளம்பும்போது வேலை சம்பந்தப்பட்ட அனைத்து விஷ யங்களையும் ஸ்விட்ச் ஆஃப் செய்துவிட்டுச் செல்வது என்பது உங்களுடைய நலனுக்கு மட்டுமன்றி, உங்களுடைய நாளைய தினம் அதிக புரொடக்டிவ்வாக இருப்பதற்கும் உதவும்" என்கிறார் இந்தப் புத்தகத்தை எழுதிய ஆசிரியர்.

"இது எப்படி நடக்கும் என நீங்கள் கேட்கலாம். இங்கேதான் வேலை பற்றியும், அதைச்செய்யும் விதம் பற்றியும் உங்களுக்கு இருக்கும் புரிந்துகொள்ளல் மேம்பட வேண்டும். சரியான அளவுக்கு ஓய்வு மற்றும் பொழுது போக்கின் மூலம் உற்சாகம் அடைவது என்பது ஒருவருக்கு மிக மிக அவசியம். இந்த இரண்டும் சரியான அளவு கிடைத்தால்தான் அவரால் புத்துணர்வுடன் பணியில் ஈடுபட முடியும். இந்த இரு விஷ யங்களும் தேவையான அளவு கிடைக்காமல் போனால், வேலை செய்பவரின் உடல் நலமும் மனநலமும் பெரிய அளவில் பாதிப்படையவே செய்யும்.

நிம்மதியாக ஓய்வெடுக்க முடியாத நபர்கள் குறைந்த உற்பத்தித் திறனுடனும், சரியான முடிவு எடுக்க முடியாமலும், ஆகக் குறைந்த கிரியேட்டிவிட்டியுடனும், மோசமான பணியிட நடத்தையுடனும் செயல்பட வாய்ப்பு உள்ளது" என்று சொல்கிறார் ஆசிரியர்.

### நான்கு பெரும் பிரிவுகளாக

இந்தப் புத்தகம் நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரித்து எழுதப்பட்டுள்ளது. முதல் பிரிவில் ஏன் வேலையில் இருந்து

ஸ்விட்ச் ஆஃப் செய்து முழுமையான ரிலாக்சேஷன் ஒவ்வொருவருக்கும் தேவை என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

இரண்டாவது பிரிவில், அலுவலகத்தில் இல்லாத நேரத்தில் உருவாகும் வேலை சார்ந்த சிந்தனைகளைக் கையாளுவது எப்படி மற்றும் நம்முடைய வாழ்க்கையை நம் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வது எப்படி என்பதை விளக்கமாகக் கூறுகிறது.

மூன்றாவது பகுதியில், அலுவலக நேரத்தில் எந்த மாதிரியான செயல்பாடுகளை நாம் கொண்டிருந்தால், அலுவலக நேரத்துக்குப் பின் முழுமையான ஓய்வை எடுக்க முடியும் என்பதை விளக்கமாகச் சொல்கிறது.

நான்காவது பகுதியில், பல சமயங்களில் அலுவலகச் சூழல் நம்மை ஓய்வெடுக்க விடவே விடாது. அப்பேற்பட்ட கடினமான சூழல்களில் எப்படி மனம் தளராமல் நம்முடைய குறிக்கோளை நோக்கிச் செயல்படுவது என்பது குறித்து விளக்குகிறது.

### நீண்ட நேரம் வேலைபார்த்தால்?

"நீண்ட நேரம் வேலை செய்தால் ஹார்ட் அட்டாக் வருவதற்கான வாய்ப்பு அதிகம் என்கின்றன ஆய்வு முடிவுகள்.

நீண்ட நேரம் பணியிடத்தில் வேலை செய்வதற்குப் பெயர்போன ஜப்பானிலேயே இன்றைக்கு அது உருவாக்கும் பாதகங்களைக் கண்டறிந்து, நீண்ட நேரம் பணியாளர்கள் அலுவலகத்தில் பணிபுரிவதைத் தடுக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

சாகும் வரை வேலை என்ற கொள்கை கொண்டவர்களைக் கொண்ட அந்த நாட்டின் மொழியில், அதிக வேலையால் மரணம் என்பதற்கு 'கரோஷி' (மயசூளாை) என்கிற சொற்பதம் இருக்கிறது. இன்றைக்கு ஜப்பானிய நிறுவனங்கள் ஆண்டொன்றுக்கு ஒரு பணியாளர் எத்தனை மணி நேரம் ஓவர்டைம் வேலை பார்க்கலாம் என்பதற்கு உச்சவரம்பைக் கொண்டு வந்துள்ளன. பல நிறுவனங்கள் பணியாளர்களை நேரத்துக்கு வீட்டுக்குப் போகச் சொல்லி கட்டாயப்படுத்துகின்றன. சில நிறுவனங்கள் மாலை நேரத்தில் ஓய்வின் அவசியத்தை விளக்கமாக ரேடியோ மற்றும் டிவி-யில் சொல்கின்றன.

### வீட்டுக்குப் போனபின்னும் வேலை

நிறுவனங்கள் இப்படி முனைப்போடு செயல்பட்டாலுமே பலரும் அலுவலகத்தில் இருந்து கிளம்பி வீட்டுக்குச் சென்று அங்கே அலுவலக வேலையைச் செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

பிரிட்டனில் 3,000 பணியாளர்களுக்கு மத்தியில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில் 70% பேர் பணியிடத்தை விட்டு சென்ற பின் பணி குறித்து முழு மையாக மறக்க முடிய வில்லை என்று கூறியுள்ளனர்.

72% பேர் பணியிடத்தில் இருந்து வெளியேறிய பின்னர், பணி குறித்த கவலையை மனதில் கொண்டிருப்பதாகக் கூறியுள்ளனர். 20% பேர் அடிக்கடி வேலை குறித்த சிந்தனையைக் கொண்டிருக்கின்றனர். 10% பேர் எப்போதுமே வேலை குறித்த சிந்தனையிலேயே இருப்பதாகவும் கூறியுள்ளனர். இதிலிருந்து என்ன தெரிகிறது? வேலையில் இருந்து கிளம்பினாலும் வேலை குறித்த எண்ணங்களை ஸ்விட்ச் ஆஃப் செய்ய முடிவதில்லை என்பதுதானே?

மனிதர்களாகிய நாம் மாடுகள் உணவை அசைபோடுவதைப் போல, பணியிட நினைவுகளைத் தொடர்ந்து அசைபோடுவதை கொஞ்சம் கொஞ்சமாக வாடிக்கையாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதுதானே நிஜம். இது மிகப் பெரும் தவறாகும்.

### புத்துணர்ச்சி பெறுவது எப்படி?

நாம் அலுவலகத்தை விட்டு கிளம்பிச் சென்றபின், நம்முடைய மூளையானது பணியிடத்தில் இருக்கும் சூழல் மற்றும் கட்டுப்பாடுகளில் இருந்து கொஞ்சம் விடுபட்டு புத்துணர்வை அடைய வேண்டும்.

இப்படிப் புத்துணர்வை அடையாமல் போனால், நம்முடைய செயல்பாடுகளில் குளறுபடிகள் அதிகரிக்கவே செய்யும். இது மனச் சோர்வுக்கு வழிவகுக்கவே செய்யும். நீண்ட நாள்கள் இதே நிலை தொடர்ந்தால், அது பல்வேறு உடல்நலக் கோளாறுகளை நமக்குள் ஏற்படுத்தும்.

ரிலாக்ஸ் செய்துகொள்வது என்றால், உடனே அக்கடா என்று சோபாவில் சாய்ந்து கொண்டு தொலைக்காட்சி பார்ப்பது என்று அர்த்தம் செய்து கொள்ளக்கூடாது. அது மிகக் குறைந்த அளவிலான ரிலாக்சேஷனுக்கே வழிவகுக்கும்!

எந்தப் பரபரப்பும் இல்லாமல் சிறிது தூரம் நடைப்பயிற்சி சென்று வரலாம் வீட்டில் உள்ள செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றலாம் கொஞ்சம் நீச்சலடிக்கலாம் வீட்டில் உள்ள பாத்திரங்களைக் கழுவுவது, சமையல் செய்வது, அலுவலக வேலையுடன் தொடர்பு இல்லாத நண்பர்களுடன் பேசுவது போன்றவற்றை செய்தால் அது நல்ல தொரு ரிலாக்சேஷனுக்கு வழிவகுக்கும்" என்று சொல்லும் ஆசிரியர்,

இப்படி புத்துணர்ச்சி அடைவதில் குழந்தைகளின் பங்களிப்பு, ஹாபியின் பங்களிப்பு, தியானத்தின் பங்களிப்பு போன்றவற்றையும் விளக்கமாக எடுத்துச் சொல்கிறார்.

### அலுவலகத்தை மறந்திருப்பது எப்படி?

அலுவலக விஷயங்களை அலுவலகத்திலேயே வைத்து விட்டுச் செல்வது எப்படி என்பதற்கான பல வழிமுறைகளையும் இந்தப் புத்தகம் கூறுகிறது. இது குறித்த பல்வேறு அளவுகோல்களையும் இந்தப் புத்தகத்தில் தந்துள்ள ஆசிரியர், "இந்தப் புத்தகத்தில் தரப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றினால் நிச்சயம் உங்களால் அலுவலக விஷயங்களில் இருந்து 'ஸ்விட்ச் ஆஃப்' செய்துகொள்ள முடியும்.

இந்தப் புத்தகம் சிலருக்குத் தேவைப்படாது. ஏனென்றால், அவர்கள் 'ஸ்விட்ச் ஆன்' செய்து கொள்வதே இல்லை" என்று கிண்டலாகக் கூறி முடிக்கிறார் ஆசிரியர். நிறைய வேலை செய்து, நிம்மதியாக வாழ நினைக்கும் அனைவரும் இந்தப் புத்தகத்தை அவசியம் படிக்கலாம்!



# முல்லை ஓய்வு நகர்
# Mullai Rest City

## எழுதுமட்டுவாழ் நகரில்
## 2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

*இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!*

**உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.**
**மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்**
**அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்**

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்










4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



**தொடர்புகளுக்கு: 0777 43 5557**


இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.04.2024இல் வெளியிடப்பெற்றது.